**அரசு ஊழியர்**

மார்ச் 2017

மலர் : 38 இதழ் : 3

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக வெளியிடுபவர் : இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல், மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம், எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ், 2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை, சென்னை - 600 015.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


சூடா ஒரு கோப்பை சூப்

## உரிமையும் கடமையும்

பெற்ற உரிமைகள்
ஒவ்வொன்றிலும்
உழைத்தவர்
கரங்களுண்டு,
உதிர்த்திட்ட
வேர்வை உண்டு,
வடித்திட்ட
ரத்தம் உண்டு!

அத்தகு
உரிமைகளை
எத்தகு
இடர்ப்பாடு வரினும்
கட்டோடு காக்கின்ற
கடப்பாடு
நமக்கு உண்டு!

- (மூலம்) கந்தர்வன்

# களம் காண்போம்! வெற்றிக்கனி பறிப்போம்!

*திருவண்ணாமலை 12ஆம் மாநில மாநாடு எடுத்த முடிவு முதல் வெற்றியை ஈட்டியுள்ளது. பிப்ரவரி 2ஆம் தேதி நடைபெற்ற மாவட்டத் தலைநகர் உண்ணாவிரதப் போராட்டம் அரசின் காதுகளில் உரசியதின் விளைவு புதியதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசின் முதலமைச்சர், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான 8வது ஊதிய மாற்றத்திற்கான 5 பேர் கொண்ட குழுவை அமைத்து நான்கு மாத காலத்திற்குள் பரிந்துரைகள் அனுப்ப உத்திரவிட்டுள்ளார்.*

*ஆனாலும், அரசின் கொள்கையில் பெரிய மாற்றம் உருவாகிவிட்டது என எண்ணிவிட முடியாது. பல கட்ட அரசியல் சூழல்கள் உருவாகி அதிமுகவின் மூன்றாவது முதலமைச்சராக திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பொறுப்பேற்றுள்ளதைத் தொடர்ந்து நமது சங்கத்தின் சார்பில் அவரை 22.2.2017 அன்று சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தோம். அநேகமாக 6 ஆண்டுகளுக்கு பின்னர் நாம் நேரில் சந்தித்த முதலமைச்சர் இவராகத்தான் இருக்க முடியும்.*

*ஊதியக்குழுவை அமைத்த அதே வேளையில் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு அறிக்கை சமர்ப்பிக்காதது உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு அரசாணைகள் எதிர்பார்த்து அரசு ஊழியர்கள் உள்ளனர் என முதல்வரிடம் தெரிவித்ததோடு அவரும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.*

*ஊதியக் குழு அமைத்தது ஒன்றே நம் பிரச்சனைகள் முடிந்துவிடும் என்பதோடு, கடந்த ஊதியக் குழு, அதற்கு முன் உள்ள ஊதியக் குழுக்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் தீரவில்லை. நமது சங்கத்தினை அழைத்துப் பேசி ஊதிய மாற்றம் குறித்து பேசித் தீர்க்க பல முறை வலியுறுத்தியும் அரசு ஏற்கவில்லை. புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு ஒரு*

கண்துடைப்பாகவே உள்ளது. இடைக்கால நிவாரணம் என்ற வார்த்தைக்கு அரசு இடம் தராது போன்ற நிலையே தொடர்கிறது.

2016 அன்று நடைபெற்ற நமது வேலை நிறுத்த போராட்டத்தின்போது மறைந்த முன்னாள் முதல்வர் சட்டசபையில் 19.2.2016 அன்று அறிவித்த அறிவிப்புகள் அனைத்தும் காற்றில் பறக்க விடுவார்கள் போலத் தெரிகிறது. சத்துணவு, அங்கன்வாடி, செயலாளர், கிராம உதவியாளர் மற்றும் ஊர்ப்புற நூலகர் ஆகியோரின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண வேண்டிய நேரம் வந்துள்ளது.

இந்த ஊதிய மாற்றத்திலாவது சிறப்பு காலமுறை ஊதியம் முடிவுக்கு வருமா என்பது தெரியவில்லை. சாலைப் பணியாளர்கள் பிரச்சினை முடிவுக்கு கொண்டு வராத அமைச்சரே தற்போது முதலமைச்சராக உள்ளார். இப்போதாவது 41 மாதம் பணிக்காலமாகுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அவுட் சோர்சிங், தொகுப்பூதியம், தினக்கூலி ஊழியர்கள் இன்னும் அந்தரத்தில் தொடங்கு நிலை மாறுமா எனத் தெரியவில்லை. வறட்சி, நீட் தேர்வு, நெடுவாசல் பிரச்சினை, ஆதார் இல்லை என்றால் ரேஷனில் அரிசி இல்லை என ஏராளமான மக்கள் பிரச்சனைகள் கண்டுகொள்ளப்படாமல் உள்ளன. பிரச்சனைகளை அரசு கண்டு கொள்ளப்படாத நிலையில் அதனை களத்தில் சமாளிக்கும் நிர்ப்பந்தத்திற்கு சமீப காலமாக அரசு ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். மக்களுக்குரிய திட்டங்களை நிறைவேற்ற போதிய நிதி ஒதுக்காதது அரசு ஊழியர்களுக்கு மிகுந்த சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளது. பிரச்சினைகளை தீர்க்கும் நிலையில் அரசு இருப்பதாக தெரியவில்லை.

போராட்டம் இல்லாமல் பிரச்சனைகள் தீராது என்ற நிலையில் ஆங்காங்கே நடைபெறும் போராட்டங்கள்தான் எல்லோர்க்கும் தீர்வை கொடுக்கிறது. நாம் கடந்து வந்த பாதையும் அதுதான்.

தற்போதுள்ள அரசியல் சூழலில், ஊதிய மாற்றம், இடைக்கால நிவாரணம், புதிய பென்சன் ரத்து செய்வது, சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து, சாலைப் பணியாளர்கள் பிரச்சனை, தொகுப்பூதியம், அவுட் சோர்சிங், தினக்கூலி நியமனம் ரத்து இன்னும் பல கோரிக்கைகளுக்கு தொடர்ந்து போராட்ட களம் காண வேண்டியுள்ளது. எனவே, மார்ச் 15 பேரணி மற்றும் ஏப்ரல் 25 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் மிக சக்தியாக முன்னெப்போதும் இல்லாத அளவில் நடத்த வேண்டியது நமது ஒவ்வொருவரின் கடமையாகும். அதற்காக தயாராவோம். களம் காண்போம். வெற்றிக்கனி பறிப்போம். ❖

**தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழு**

# மாநில போராட்டக் குழுக் கூட்டம்

நாள் : 12.03.2017 ஞாயிறு நேரம் : காலை 11 மணி

இடம் : தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்,
எண். 46, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

பொருள் : 1. 15.3.2017 மாவட்டத் தலைநகர் பேரணி மற்றும்
25.4.2017 காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம்.
2. ஊதிய மாற்ற அலுவலர் குழுவும் ஊழியர் கோரிக்கைகளும்.

# கடவுள் இருக்கார் குமாரு!

மனோஹரி

**செ**ன்ற வாரத்தில் ஒருநாள் எங்கள் குடியிருப்பில் உள்ள பூங்காவில் நடைபயிற்சி மேற்கொண்டிருந்த போது எதிர்திசையில் குமார் நடந்து வந்து கொண்டிருந்தான்.

“தோழா, நானே உங்களைப் பாத்து கேக்கணும்னு நெனச்சேன், அதான் கவர்ன்மெண்ட்ல ஊதிய மாற்றத்துக்கு அலுவலர் குழு போட்டுட்டாங்களே அதுக்கப்புறமும் எதுக்கு போராட்டத்தை கைவிட மாட்டேங்கறீங்க?''

''அலுவலர் குழுங்கறது ஊதிய மாற்றத்துக்கு மட்டும்தானே குமார். புதிய பென்சன் திட்டத்தை ரத்து பண்றேன்னு சொல்லிட்டு இன்னும் பண்ணாம இருக்ககாங்க, காலிப்பணியிடங்கள் நிரப்பப் படாம கெடக்கு, வரையறுக்கப்பட்ட ஊதியம் கேட்டுக்கிட்டே இருக்கோம் அரசு அசரல.''

''ஜி, நாடு இப்ப இருக்கற நிலைமையில இதெல்லாம் தருவாங்கன்னு நெனக்கறீங்களா? அவனவன் பதவிக்காக சண்டை போடறான், ஆள் கடத்தறான், இல்லாத பொய் எல்லாம் வாய் கூசாம சொல்றான். ஏதோ கொடுக்கறத வாங்கிட்டு போறதுதான் புத்திசாலித்தனம்னு நெனக்கிறேன்.''

''குமாரு என்ன சொல்ற நீ. அதுக்காக போராடாம உரிமைகளை எல்லாம் அப்படியே விட்டுடலாம்னு சொல்றியா?''

''போராட வேணாம்னு சொல்லலை, போராடுவது வேஸ்ட்டுனு சொல்ல வர்றேன்.''

''ஏன் குமாரு நம்பிக்கையில்லாம பேசறே? அரசு உழியர்கள் இப்ப அனுபவிக்கிற எல்லா உரிமைகளும் இப்படி போராடி வாங்கினதுதான்னு தெரியாதா உனக்கு.''

''அது அந்தக்காலம் தோழா. போன ஊதிய மாற்றத்தின்போது கருணாநிதி என்ன சொன்னார்? சென்ட்ரல் கவர்ன்மெண்ட்ல என்ன கொடுக்கறாங்களோ அதை அப்படியே நமக்கும் தர்றேன்னு சொன்னாரு, தந்தாரா? அதேமாதிரி 2011 எலக்ஷன் அறிக்கையில ஜெயலலிதா என்ன சொன்னாங்க? ஆட்சிக்கு வந்தா பழைய பென்சன் திட்டத்தை திரும்ப கொண்டு வருவேன்னாங்க? செஞ்சாங்களா?'' என்றான்

''நீ நினைக்கிற மாதிரிதான் பெரும்பாலான அரசு உழியர்கள் நினைக்கிறாங்க. இப்ப நாம அனுபவிக்கிற உரிமைகள்கூட நாம போராடாம இருந்தா போயிடும்னு உங்களை மாதிரியான ஆளுங்களுக்கு புரியமாட்டேங்குது. 13 மாசமா அகவிலைப்படி தராம விட்டுட்டாங்க போராடித்தான் வாங்கினோம். சரண்டர் விடுப்பு திடீர்னு நிறுத்திட்டாங்க போராடித்தான் வாங்கினோம். போன பே கமிஷன்ல ஊதிய முரண்பாடுகள் தீர்க்கப்படாம இருந்திருக்கலாம். ஆனா தொடர்ந்து போராடினதாலதான் ஊதிய மாற்ற அலுவலர் குழு, அதன்பிறகு ஒரு நபர் குழுவெல்லாம் அமைச்சு அரசாணைகள் போட வெச்சோம். அரசாணைகள்ல குறைபாடுகள் இருக்கலாம். ஆனா குறைபாடுகள் உள்ள அரசாணைகளாவது வெளிவர காரணமாயிருந்தது நமது தொடர் போராட்டங்கள்தான்'' என்றேன்.

''தோழர் கடவுள் இருக்காரா இல்லையான்னு கேட்டா என்ன சொல்லுவீங்க நீங்க?''

''பகுத்தறிவுதான் கடவுள், நம்பிக்கைதான் கடவுள்னு சொல்வேன் நான்.''

''அதாவது கடவுள் இருக்காருன்னு சொல்றீங்க ஆனா நேர்ல பாத்ததில்ல. அதுமாதிரிதான் உங்க போராட்டங்களும். நீங்கள் போராடலாம் ஆனா வெற்றியை பார்க்கவே முடியாது.'' என்றான் குமார்

''அப்படின்னா கடவுளே இல்லேங்கறியா குமாரு?''

''கடவுன் இல்லேன்னு சொல்ல மாட்டேன், இருந்தா நல்லா இருக்கும்னுதான் சொல்வேன்னு கமல்உறாசன் சொன்னதைத்தான் சொல்ல வேண்டியிருக்கு.'' என்றவன் ''சரி வீட்டு வரைக்கும் வந்துட்டு போங்களேன். காதம்பரியை பாத்து ரொம்ப நாளாச்சில்ல.'' என்றான்.

''உண்மைதான் குமாரு வேலை டென்ஷன்ல எங்கயும்போக முடியறதில்லை. காதம்பரி எப்படி இருக்கா?'' என்றேன்.

''அவ ஸ்கூலுக்க போக ஆரம்பிச்சதுல இருந்து பேச்சு அதிகமாயிடுச்சி. அவ கேக்கற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியல எங்களால.'' என்றான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் குமார், காதம்பரியை கூப்பிட்டான். அவள் ஒரு காகிதத்தில் ஏதோ சீரியஸாக வரைந்து கொண்டிருந்தாள். ''காதம்பரி யார் வந்திருக்காங்க பாரு? நம்ம ஆதித்யா அப்பாம்மா'' என்றான்.

''அப்பா ப்ளீஸ் ஒரு அஞ்சு நிமிஷம் டிஸ்டர்ப் பண்ணாதீங்க.''என்றாள் காதம்பரி

அவளை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் என்று நான் குமாருக்கு சைகை செய்தேன். குமார் மெதுவாக அவள் பக்கத்தில் சென்று ''குட்டிம்மா என்ன பண்றீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''நானா?, கடவுளை வரைஞ்சுகிட்டிருக்கேன்.'' என்றாள்

''ஆனா கடவுள் எப்படி இருப்பார்னு யாருக்கும் தெரியாதே செல்லம்'' என்றான் அவன்

''நான் படம் வரைஞ்சு முடிஞ்சதும் எல்லோருக்கும் தெரிஞ்சுடும்'' என்றவள் வரைவதை தொடர்ந்தாள். அவள் சொன்ன பதிலில் அதிர்ச்சியடைந்த குமார் என்னை திரும்பிப்பார்த்தான்

''உண்மைதான் குமார், கடவுள் எப்படி இருப்பார்னு கடவுள் தீர்மானிக்கறதில்லை, நாமதான் தீர்மானிக்கிறோம். அதேபோல போராட்டம் வெற்றியா தோல்வியான்னு தீர்மானிக்கறது அரசாங்கமோ ஆட்சியாளர்களோ இல்லை அரசு ஊழியர்கள்தான். கடவுள் இருக்கார் குமாரு.'' என்றேன். குமாரின் முகம் வெளிறியது.

❖

# நடப்பவை போர்வீரனுக்கான போராட்டத்தின் இறுதிச்சுற்று

சாதாரண மனிதனுக்கும்
போர்வீரனுக்கும்
என்ன வித்தியாசம்?
போர்வீரன்
எல்லாவற்றையும்
சவால்களாக
எடுத்துக் கொள்கிறான்
சாதாரண மனிதனோ
எல்லாவற்றையும்
ஆசீர்வாதமாகவோ,
சாபமாகவோ
எடுத்துக்கொள்கிறான்



**டா**ன் ஜுவான் அவர்களின் மேற்கண்ட வார்த்தைகள்தான் இந்தக் கட்டுரை எழுத ஆரம்பிக்கும் போது நினைவுக்கு வருகிறது. தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 22-02-2017ம் தேதி ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதில், மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்கள் குறித்து மத்திய அரசு எடுத்துள்ள முடிவுகளைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்க ஐந்து பேர் அடங்கிய "அலுவலர் குழு" ஒன்று அமைக்க உத்தரவிட்டுள்ளதாகவும்,

இந்த அலுவலர் குழு மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்கள் குறித்து மத்தியஅரசு எடுத்துள்ள முடிவுகளை ஆராய்ந்து அவற்றை தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவும்,

மத்திய அரசு பரிந்துரைத்துள்ள திருத்திய ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் மற்றும் திருத்திய ஓய்வுகாலப் பயன்கள் குறித்து ஆராய்ந்து அவற்றை ஓய்வூதியதாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு விரிவுபடுத்துவது குறித்தும் தக்க பரிந்துரைகளை வழங்கிடக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும்,

இக்குழு இதர படிகள் தொடர்பாக மத்திய அரசு அமைத்துள்ள உயர்மட்டக் குழு அளிக்கும் அறிக்கையினையும் ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளதாகவும்,

இக்குழு 30.06.2017க்குள் தனது அறிக்கையை அரசுக்கு அளிக்கப் பணித்திருப்பதாகவும்,

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் மற்றும் ஏனைய சங்கங்கள் இவ்வலுவலர் குழுவிற்கு ஊதிய விகிதம், ஓய்வூதிய திருத்தம் குறித்த தங்கள் கோரிக்கையை அனுப்பி வைக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்பைத் தொடர்ந்து நிதி (பணப்பிரிவு) துறையிலிருந்து 22.02.2017 தேதியிட்டு இதற்கான அரசாணை எண்.40 வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த அரசாணையில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் மற்றும் ஏனைய சங்கங்கள் இவ்வலுவலர் குழுவிற்கு ஊதிய விகிதம், ஓய்வூதிய திருத்தம் குறித்த தங்கள் கோரிக்கைகளை அனுப்பி வைக்கலாம் என்ற முதல்வர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த வாசகங்கள் விடப்பட்டுள்ளன என்பது கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இந்த ஐவர் அலுவலர் குழுவில்

1. கூடுதல் தலைமை செயலாளர், நிதித்துறை
2. முதன்மை செயலாளர், உள்துறை

3. முதன்மை செயலாளர், பள்ளி கல்வித்துறை

4. செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

5. டாக்டர்.பி. உமாநாத், இ.ஆ.ப., - உறுப்பினர் செயலாளர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழக முதல்வரின் இந்த அறிவிப்புக்கும் அரசாணைக்கும் அரசு ஊழியர் சங்கம் பத்திரிகைச் செய்தி, ஊடக விவாதம் மற்றும் முதல்வரை நேரடியாக சந்தித்தல் மூலம் வரவேற்பினை தெரிவித்து கொண்டதோடு முதல்வரை நேரில் சந்தித்த போது அலுவலர் குழ ஆளுகைக்கு வராத கோரிக்கைகளான 1.1.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்கிடவும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடரவும், சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிடவும், சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிக்காலமாக அறிவிக்கவும் மாநில நிர்வாகிகள் வலியுறுத்தினர். நமது கோரிக்கைகளை கேட்ட முதல்வர் அவற்றை ஒவ்வொன்றாக பரிசீலிப்பதாக கூறியுள்ளார்.

தோழர்களே, இந்த அறிவிப்பும், அரசாணையும், இந்த அரசு, அரசு ஊழியர்களின் மீது அக்கரை கொண்டு வெளியிட்டுள்ளதாக சில ஊடகங்களும், அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் விமர்சன பார்வை வைக்கின்றன. சில ஊடகவாதிகள் செயல்படாத அரசு வேகமாக செயல்படுகிறது என்கிற தோற்றத்தை உருவாக்கவே இந்த அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன என்ற தர்க்கவாதத்தை ஏற்படுத்துகின்றன. அறைபோட்டு அகழ்வாராய்ச்சி செய்யும் அரசியல் விஞ்ஞானிகள் சிலர் உள்ளாட்சித் தேர்தல் வருகிறது, அதற்கு அரசு ஊழியர்களின் ஒத்துழைப்பும், ஓட்டும் தேவை என்பதால் இந்த அறிவிப்புகள் என்று குதர்க்கவாதம் கூறுகின்றனர். நுனிப்புல் மேயும் பெரும்பாலான ஊடகவாதிகளுக்கு இந்த அறிவிப்பின் பின்புலத்தில் நாம் மேற்கொண்டுவரும் அயராத போராட்டங்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. 01.01.2016 தேதியிலிருந்து நிலுவையிலிருக்கும் அரசு ஊழியர்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை கடந்த 14 மாதங்களாக கிடப்பில் போடப்பட்டுவிட்ட நிலையில் அரசு ஊழியர் சங்கமும் பிற சங்கங்களும் அதற்காக நடத்தி வரும் தொடர் போராட்டங்களின் விளைவும், அறிவிக்கப்பட்டுள்ள அடுத்தடுத்த போராட்டங்களின் உக்கிரமுமே தமிழக அரசை இந்த அறிவிப்பை வெளியிட வைத்திருக்கிறது என்பதுதான் யதார்த்த நிலை.

தமிழகத்தின் தற்போதைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், புதிதாக பதவியேற்றுள்ள அரசு, அரசு ஊழியர்களுக்கு பெரிதான ஒன்றை செய்துவிட்டதைப்போன்றதொரு தோற்றத்தை இந்த அறிவிப்பு மற்றும் அரசாணை மூலம் பொதுவெளியில் ஏற்படுத்தி உள்ளது. இருப்பினும் கள நிலவரம் என்ன என்பதை அரசு ஊழியர்கள் நன்கு உணர்வர். சென்ற ஊதியமாற்றத்தின் போது ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இன்னும் தொண்டைக்குழி முள்ளாக சிக்கியிருக்கும் நிலையில் இப்போதைய அறிவிப்பு ஒரு நெடும் பயணத்தின் முதல் காலடியே. அமைக்கப்பட்டுள்ள அலுவலர் குழு, ஊழியர் சங்கங்களின் முறையீடுகளை நியாயமான முறையில் பரிசீலித்து நான்கு மாதங்களுக்கு மேல் கால நீட்டிப்பு கோராமல், முரண்பாடுகளற்ற ஊதிய மாற்றத்தை பரிந்துரைக்க வேண்டும். அதற்குமுன் சென்ற ஊதிய மாற்றத்தில் சரி செய்யப்படாமல் இருக்கும் முரண்களை சரி செய்ய வேண்டும். அதற்கு ஊழியர் சங்க பிரதிநிதிகளை அழைத்து ஊதிய முரண்பாடுகளை தீர்க்கும் வழிகளை திறந்த மனதுடன் கேட்டு நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டும். அலுவலர் குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றதும் அரசு காலம் தாழ்த்தாமல் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இவையெல்லாம் நடைபெற குறைந்தபட்சம் இன்னும் 6 முதல் 8 மாதங்கள் (இது குறைந்தபட்சம்தான்) ஆகும் என்பதால் 01.01.2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஊதிய மாற்றம் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் தள்ளிப்போகும் நிலை எழுந்துள்ளதால், ஊதிய மாற்றம் நடைமுறைப் படுத்தப்படும் வரை 01.01.2016 முதல் இடைக்கால நிவாரணமாக 20 சதவீத ஊதியம் வழங்க வேண்டும் என்பது நமது நியாயமான கோரிக்கையும் நிலைப்பாடுமாகும்.

இந்த நேரத்தில் கடந்த ஊதிய மாற்றத்தின் போது நாம் பெற்ற கசப்பான அனுபவங்களை ஊழியர்களின் நினைவுக்கு கொண்டுவருவது இன்றியமையாதது என்று கருதுகிறோம். 2007ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நமது சங்கத்தின் 8வது மாநில மாநாட்டில் அப்போதைய முதல்வர் திரு.கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றிய போது ''மத்திய அரசின் 6வது ஊதியக்குழு பரிந்துரை வெளியானவுடன் அனைவரும் மனம் மகிழத்தக்க வகையில் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் செய்யப்படும், காலிப் பணியிடங்கள் மத்திய அரசின் 6வது

ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் படிப்படியாக பூர்த்தி செய்யப்படும்'' என்றார். 2008 ஆகஸ்ட் மாதத்தில் மத்திய அரசு ஊதிய மாற்றத்தை அறிவித்தது. உடனே நாம் தமிழக அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து தமிழக முதல்வர் சங்கங்களை அழைத்துப் பேச வேண்டும் என வலியுறுத்தி அதற்கென சில இயக்கங்களை அறிவித்தோம். இதனிடையில் அன்றைய முதல்வர் கருணாநிதி அவர்கள் 15.8.2008 அன்று கோட்டையில் கொடியேற்றி வைத்துவிட்டு பத்திரிகையாளர்களிடம், ''தமிழக அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றம்,மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கியதுபோன்று அப்படியே வழங்கப்படும்'' என தெரிவித்தார். அதன் பின்னரும் அரசுத் தரப்பில் எவ்வித அசைவும் இல்லாத நிலையில் 19.09.2008ல் நாம் நடத்திய கோட்டை நோக்கிப் பேரணி முடிவில் மாநில நிர்வாகிகள் அன்றைய அரசுச் செயலரை சந்தித்து மத்திய அரசின் 6வது ஊதியக்குழு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் தமிழக அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றம் குறித்து உடனடியாக சங்கங்களை அழைத்துப் பேசிட வேண்டும் என வலியுறுத்தினோம். அதன்பிறகே ஊதிய மாற்ற அலுவலர் குழு அமைக்கப்பட்டது. இந்த அலுவலர் குழுவானது சங்கங்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்று அவற்றை பரிசீலிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. சங்கங்களின் கருத்துக்களை பரிசீலிப்பதாக கண்துடைப்பு நாடகம் ஆடிய அலுவலர் குழு, ஒன்பது மாத கால அவகாசத்திற்குப் பின், அரசின் ஆணைக்கிணங்க சங்கங்களின் கருத்துக்களை பரிசீலிக்காமலேயே தன்னிச்சையான முடிவுகள் எடுக்கப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டன.

பல்வேறு குறைபாடுகளுடனும், சமச்சீரற்ற ஊதிய உயர்வுகளுடனும் அரசாணைகள் வெளிவந்ததால் அது ஊழியர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்தக் குறைகளை களைய நமது சங்கத்தின் சார்பில் அரசிடம், உடனடியாக சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி குறைகளை களையக் கேட்டபோது அரசானது சங்கத் தலைவர்களை அழைத்துப்பேசி குறைகளை களைய முற்படாமல் அதை மேலும் காலதாமதப்படுத்தும் நோக்கில் 9.9.2009 அன்று ஒருநபர் குழுவை திரு,இராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அமைத்தது. இந்தக்குழுவும் 7 மாதகாலமாக பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்காமல் அதன்பிறகு அரசு ஊழியர் சங்கம் 1000 அலுவலகங்கள் முன்பு பரிந்துரைகளை அரசுக்கு விரைந்து தாக்கல் செய்ய ஆர்ப்பாட்டம் நடத்தியதன் பின்பு 24.4.2010ம் தேதி தாக்கல் செய்தது. அதன்பிறகு அரசு இந்த அறிக்கையை ஆய்வு செய்வதாக கூறி நான்கு மாத காலம் எடுத்துக்கொண்டு 26.8.2010ம் தேதி ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்பதாக கூறி, அப்போதும் சங்கங்களை அழைத்துப் பேசாமலேயே 89 அரசாணைகள் வெளியிட்டன. இந்த அரசாணைகளால் மேலும் பல புதிய ஊதிய முரண்பாடுகள் தோன்றி நிலைமை மேலும் மேலும் சிக்கலுக்குள்ளானது. இந்த அரசாணைகள் சிலவற்றை எதிர்த்து ஊழியர்கள் நீதிமன்றம் போனார்கள். நாமும் தொடர்ந்து அரசிடம், சிக்கலை தீர்க்கச் சொன்னால் தீராத சிக்கலை ஏற்படுத்துவதை உணர்த்தினோம். அரசு அதை செவிமெடுக்கவில்லை. இதற்கிடையில் 2011 தேர்தல் அட்டவணை வெளியாக அரசு ஊழியரின் ஊதிய முரண்பாடுகள் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளாக மாறின. மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி. ஜெயலலிதா அவர்களும் அதிமுக ஆட்சியமைத்தால் உழியர் பிரச்னைகளை கூப்பிட்டுப் பேசி குறை தீர்ப்பதாகவும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய பென்சனே தொடரும் என்றும் வாக்களித்தார். இந்த வாக்குறுதிகள் எல்லாம் இன்றும் நிலுவையில் உள்ளன என்பதை நாமும் அறிவோம் நாடும் அறியும், ஆட்சியாளர்களும் அறிவர், அரசியல்வாதிகளும் அறிவர். நமக்கு இப்போது எழுந்துள்ள ஐயமெல்லாம் பழைய கதையே திரும்ப நிகழ்ந்துவிடக்கூடாது என்பதுதான். ஆட்சியாளர்கள் நான்குமாத காலக்கெடு கொடுத்துள்ளனர். இது நீட்டிக்கப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. ஆனால் இந்த காலக்கெடுவிற்குள் அரசாங்கத்தை நாம் ஏதேனும் செய்ய வைக்க வேண்டுமென்றால் திட்டமிட்ட போராட்டங்ளை வெற்றிகரமாக நடத்திக்காட்டி நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை திரும்பத் திரும்ப நினைவூட்டிக் கொண்டிருப்பதுதான்.

அமைக்கப்பட்டுள்ள அலுவலர் குழு 7வது ஊதிய மாற்றங்களுக்கானது மட்டுமானதாகும். ஊதிய மாற்றம் தவிர தீர்க்கப்படாத பல பிரச்னைகள் உள்ளன. கடந்த ஊதியக்குழுவின் குறைபாடுகளைக் களையாமல் புதிய ஊதிய மாற்றம் என்பது மேலும் மேலும் முரண்பாடுகளை உருவாக்கிவிடும் என்பதால் அதுகுறித்து அரசிடம் கோரிக்கையை எடுத்து செல்லவேண்டிய அவசியமும் அவசரமும் எழுந்துள்ளது. அதைப்போலவே 2016 பிப்ரவரி 19ம் தேதி மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி,ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்திட அது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரைக்க வல்லுநர் குழு ஒன்று அமைப்பதாக தெரிவித்து திருமதி சாந்தா ஷீலா நாயர் இ.ஆ.ப.

(ஓய்வு) அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு 26.2.2016ல் அமைக்கப்பட்டு அந்த வல்லுநர் குழுவின் காலக்கெடுவானது இரண்டு முறை அதாவது 26.6.2016, 26.9.2016 ஆகிய தேதிகளில் தலா மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டு அதன்பிறகு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உடல்நலம் குன்றிய பின் காலக்கெடு நீட்டிப்பு செய்யப்படாமல் விடப்பட்டுள்ள நிலையில் வல்லுநர் குழுவின் பரிந்துரையும் அரசுக்கு தரப்பட்டதாக தெரியவில்லை. தற்போது வல்லுநர் குழுவின் தலைவராக இருந்த திருமதி சாந்தா ஷீலா நாயர் அவர்களும் தன்னுடைய அரசுப் பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதனால் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத்தை தொடர நாம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை விழுந்துள்ளது. தற்போது தமிழகத்தில் உள்ள அரசுத் துறைகளில் சுமார் 5 லட்சம் ஊழியர்கள் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் இருக்கிறார்கள் இவர்கள் தங்கள் ஊதியத்திலிருந்து செலுத்தியுள்ள பங்களிப்பு தொகை சுமார் ரூ. சுமார் 6,000 கோடி அரசிடம் உள்ளது. இவர்கள் இன்னும் தேசிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்படாத நிலையில் அவர்களை பழைய பயனளிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டு வருவதில் அரசுக்கு எந்தவித இடர்ப்பாடும் இருக்கப் போவதில்லை. இதற்கான போராட்டங்களை நாம் தொடர்ந்து மேற்கொண்டுள்ள நிலையில் அவற்றை இப்போது இன்னும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

அதேபோல் தரப்படுத்தப்படாத ஊதிய விகிதங்களின் கீழ் பணியாற்றிவரும் சத்துணவு/அங்கன்வாடி/வருவாய் கிராம உதவியாளர்கள்/ஊராட்சி செயலாளர்கள்/ஊர்ப்புற நூலகர்கள்/தோட்டக்கலை பண்ணை ஊழியர்கள்/ வனத்துறை காவலர்கள்/கணினி இயக்குநர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் தரப்படுத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறையுடன் கூடிய நிரந்தரப்பணி மற்றும் வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்துப் பயன்களை வழங்கிடவும் நாம் தொடர்ந்து போராடி வருகிறோம். இவர்களுடன் சாலைப் பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட 41 மாத காலத்தை பணிக்காலமாக அறிவிக்கக் கோரியும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணிநியமனங்களை ரத்து செய்து காலியாக உள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்திட வலியுறுத்தியும் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். இவற்றுக்கான போராட்டங்களை நமது 12வது மாநில மாநாட்டில் அறைகூவல் தீர்மானமாக வடிவமைத்து போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளோம். தீவிரப்படுத்தப்பட்ட நமது போராட்டங்களின் விளைவே தற்போது அமைக்கப்பட்டுள்ள ஊதிய மாற்ற அலுவலர் குழு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஊதிய மாற்றம் தவிர்த்த மேற்குறிப்பிட்ட இதர கோரிக்கைகளுக்காக நாம் நம் இடையறாத போராட்டங்களை, நம்முடைய இலக்கை எட்டும்வரை நடத்திட வேண்டும். அரசு, ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவை அமைத்துவிட்டதாலேயே நாம் அனைத்தையும் பெற்றுவிட்டதாகவோ, பெற்றவிட முடியும் என்பதாகவோ கருதிவிட முடியாது. கடந்த கால கசப்பான அனுபவங்களும், வரலாறும் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கும் பாடம் இதுவே.

நமது 12 மாநில மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக 02.02.2017ம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நாம் பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ள நிலையில், 15.03.2017ம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு பேரணி செல்வோம். நம்முடைய கோரிக்கைகளில் உள்ள நியாயத்தையும், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தையும் அரசின் காதுகளுக்கு கேட்கச் சொல்வோம். அரசு நியாயமான நம் கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முன்வராவிட்டால் வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டை நோக்கி பயணிப்போம். பூட்டப்பட்டிருக்கும் அரசின் இரும்புக் கதவுகளைத் தட்டுவோம். கோரிக்கைகளை வெல்ல முரசொலி கொட்டுவோம். சங்க முழக்கமிடுவோம். நாங்கள் சாதாரண மனிதர்கள் அல்ல, போராட்டம் என்று வந்துவிட்டால் போர்வீரர்கள் என்று நிரூபிப்போம். வாருங்கள் தோழர்களே!



வெளிநாட்டிலிருந்து பேசுகிறார்...

**"அண்ணே... கடைசியில மாட்டை காப்பாத்திட்டு நாட்டை கோட்டை விட்டுட்டீங்களேண்ணே!?"**



(c)
GOVERNMENT OF TAMIL NADU
2017

MANUSCRIPT SERIES

# FINANCE (PAY CELL) DEPARTMENT

## G.O.Ms.No.40, Dated:22nd February,2017

(Masi-10, Thiruvalluvar Aandu 2048)

**OFFICIAL COMMITTEE** – Constitution of an Official Committee to examine the revision of Pay scales / Pension to the State Government employees and pensioners following the decisions of the Central Government on the recommendations of the Seventh Central Pay Commission –Ordered.

---

**ORDER:-**

The Government has decided to constitute an Official Committee to examine and make necessary recommendations for the implementation of the revision of scales of pay and allowances of State Government Employees and Teachers based on the decisions of the Central Government on the recommendations of the Seventh Central Pay Commission. The Committee shall comprise the following members:-

1. Additional Chief Secretary, Finance Department
2. Principal Secretary, Home Department
3. Principal Secretary, School Education Department
4. Secretary, Personnel and Administrative Reforms Department
5. Dr.P.Umanath, I.A.S., Member-Secretary

2. (i) The Committee shall be chaired by seniormost Member.

(ii) The Committee shall examine the orders issued / to be issued by the Central Government on the recommendations of the Seventh Central Pay Commission scales of pay and make necessary recommendations regarding revision of the pay scales to the State Government Employees and Teachers including employees of Local Bodies.

(iii) While making recommendations on scales of pay, the Committee shall take into account the local conditions and the present relativities in the functions, qualifications and hierarchy.

(iv) The Committee shall also examine the decision of the Government of India on the revision of pension, family pension, retirement benefits etc., and also make necessary recommendations to the State Government pensioners.

(v) The Committee shall also make necessary recommendations regarding Other Allowances based on the recommendations of the High Level Committee constituted for this purpose by Government of India.

3. The Committee shall submit its report to Government within four months i.e. on or before 30-06-2017.

4. Orders regarding supporting staff to the Official Committee will be issued separately.

5. All the Departments of Secretariat and Heads of Departments are requested to render all necessary information to the Committee as and when sought for.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

# உலகளாவிய
# ஓய்வூதியர் பிரச்சனைகள்

உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள ஓய்வூதியர்களையும் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களையும் ஒரு அனைத்துலகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கான தொடக்கத்தை அனைத்துலகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு (World Federation of Trade Union-WFTU) ஏற்படுத்தியிருக் கிறது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஓய்வூதியர்கள் அனைவரும் தம்தம் நாட்டு அரசுகள் பின்பற்றும் கொள்கைகளால் தாக்குதலுக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பதை நம் ஊழியர்கள் அறிய வேண்டும். அதேபோல், ஓய்வூதியம் வழங்கும் முறையும் தாக்குதலுக் குள்ளாகி இருக்கிறது. “நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதிய முறை” (Defined Pension Scheme) என்றழைக்கப்படும் ஓய்வூதிய முறை எல்லா நாடுகளிலும் உள்ள பன்னாட்டு நிறுவனங் களின் நலன்களைப் பாதுகாத்திடும் வகையில் கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப் போகச் செய்யும்வண்ணம் அரசுகளின் நிதிக் கொள்கைகள் வழிகாட்டுகின்றன. உயிரோ டிருக்கும் காலம் உயர்ந்து விட்டதாகவும் அதனால் ஓய்வூதியர்களின் எண்ணிக்கை உயர்ந்து விட்டதாகவும் எனவே நிர்ணயிக்கப் பட்ட ஓய்வூதியத்திற்கு அரசு செலவிட இயலாது என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால் தாராளமயமாக்கலின் கீழ் பின்பற்றப் படும் மோசமான பொருளாதாரக் கொள்கை களின் விளைவாகப் பாதிக்கப்படும் பன்னாட்டு நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக அரசுகளால் பல பில்லியன் கோடிப் பணத்தைச் செலவிட முடிகிறது. தற்போதைய ஒரே சட்டம் இதுதான். பன்னாட்டு நிறுவனங்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்திட மட்டுமே அரசுகள் இயங்க வேண்டும். ஓய்வூதியர், மூத்த குடிமக்கள் மற்றும் பணி நிறைவு செய்தோர் போன்ற இதர பிரிவினர்



அனைவரும் செத்து மடிந்திட அனுமதிக்கப் பட வேண்டும்.

ஓய்வூதியர்களின் கடுமையான எதிர்ப்புக் கிடையிலும் பல நாடுகளில் வலுக்கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஓய்வூதிய மறுசீரமைப்புக் கொள்கைகளால் முதியோரின் நிதி நிலையை பாதுகாத்திட முடிந்தா? என்றால் “இல்லை” என்பதே அழுத்தமான பதிலாகும். பல நாடுகளால் தங்களின் ஓய்வு பெற்ற உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாத்திட இயலவில்லை. அதற்கான காரணங்கள் பற்பல. ஒரு ஊழியரை அல்லது தொழிலாளியை பணியமர்த்தி இருப்பவரின் பங்களிப்புடன் கூடிய அல்லது பங்களிப்பு இல்லாத, ஊழியர்களின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தில் அவர்களுக்கு பாதுகாப்பான ஓய்வுக்குப் பிந்தைய வாழ்க்கையை உறுதிப் படுத்த முடியவில்லை. பல நாடுகளில் நிலவும் சூழ்நிலையை நாம் ஆய்வு செய்தால் இப்படி ஒரு தோற்றத்தைத்தான் நாம் பெற முடிகிறது.

தொடரும் ஓய்வூதிய வெட்டின் பின்னணி யில், வாழ்க்கையின் கஷ்டங்களிலிருந்து தப்பிப்பதற்காக கிரேக்க நாட்டு ஓய்வூதியர்கள் பலர் தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள். ஓய்வூதியர்களுக்கு வழங்கிட அரசிடம்

பணமில்லை. கிட்டத்தட்ட 19 முறை கிரேக்கத்தில் ஓய்வூதியம் குறைக்கப்பட்டு விட்டது. கிரேக்கத்தில் நிலவும் நிதிப் பற்றாக்குறை மற்றும் உயர்ந்து கொண்டே வரும் வாழ்க்கைத் தரம் ஆகியவை அந்நாட்டு ஓய்வூதியர் மற்றும் பணி நிறைவு பெற்றோரின் வாழ்க்கையையே பெரும் துயராக்கிவிட்டன.

ஐரோப்பாவின் தலைவன் என்றழைக்கப் படும் ஐக்கிய முடியரசு தற்போது சந்திக்கும் பிரச்சனை வேறு வகையிலானது. உலக நாடுகள் பலவும் கடந்த பத்தாண்டுகளில் தாம் சேமித்து வைத்திருந்த நிதியை எடுத்துப் பயன்படுத்திய பின்பும், தான் சந்திக்கும் பொருளாதார பின்னடைவை பிரிட்டனால் சமாளிக்க இயலவில்லை. ஐரோப்பா யூனியனிலிருந்து வெளியேறினால் தனது பொருளாதார நெருக்கடியை சமாளிக்கலாம் என்று அது நினைத்தது. ஆனால், ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேற வேண்டும் என்ற “பிரிட்டிஷ் வெளியேற்றம்” என்ற கருத்துக் கணிப்பு இங்கிலாந்தின் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையவில்லை என்றே சொல்லப் படுகிறது. “யூரோ”வுக்கு எதிராகப் பிரிட்டிஷ் பவுண்டின் நாணய மதிப்பு எதிர்மறையான போக்கையே சந்தித்து வருகிறது.

பவுண்டின் நாணய மதிப்பு வீழ்ச்சி பலரது ஓய்வுகாலக் கனவுகளை தகர்த்துவிட்டது. அது ஓய்வூதியர் மற்றும் பணி நிறைவு செய்தோரின் பொருளாதாரப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. பவுண்ட் தன் தலைமையை இழப்பதும், யூரோவின் மதிப்பு கூடுவதும் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் போன்ற இதர நாடுகளை விடவும் ஆங்கிலேய ஓய்வூதியர்களுக்கு ஒரு நிலையற்ற எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டிஷ் வெளியேற்றம் என்ற முடிவுக்குப் பிற்பட்ட காலத்தில் 500 பவுண்டுகள் என்ற ஓய்வூதியத் தின் தற்போதைய மதிப்பு 555 யூரோக்களாகவும், ஆறு மாதங்களுக்கு முன் அதுவே 655 யூரோக்களாகவும் இருந்த நிலையில், ஓய்வூதியர்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை ஒரே நிலையில் வைத்துக் கொள்ள இயல வில்லை. இப்பின்னடைவு தொடர்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கீழ்க்கண்டம் என்றழைக்கப்படும் ஆஸ்திரேலியக் கண்டத்திலும் ஓய்வூதியர்களின் நிலை நன்றாக இல்லை. ஒப்பிட்டுப் பார்த்தால் வாழ்க்கைச் செலவு குறைவாக உள்ள தாய்லாந்து போன்ற இதர நாடுகளில் சென்று குடியேற வேண்டும் என்ற போக்கு ஆஸ்திரேலிய ஓய்வூதியர் மத்தியில் காணப் படுகிறது. எப்போதும் உயர்ந்து கொண்டே வரும் அன்றாடச் செலவுகளுக்கு இணையாக ஓய்வூதியம் உயராததும் தற்போதைய ஓய்வூதியம் வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை என்பதுமே இதற்குக் காரணமாகும். சிக்கன நடவடிக்கையின் ஒரு அங்கமாக ஆஸ்திரேலிய அரசு ஓய்வு பெறும் வயதை 70ஆக உயர்த்திட உத்தேசிக்கிறது.

இந்தியாவில் ஓய்வூதியர்கள் நிலை ஒப்பீட்டளவில் நல்ல நிலையில் இருப்பதாக உணரலாம். ஆனால், உண்மை நிலை அதுவல்ல. இந்தியாவில் ஓய்வூதியத்தின் நிலையைக் கணக்கிட, நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டம் ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

“மெர்சர் மற்றும் ஆஸ்திரேலியா நிதி ஆய்வு நிறுவனம்” எனும் ஆய்வு நிறுவனம் ஆஸ்திரேலியாவில் அரசு நிதியுதவி பெற்றுச் செயல்பட்டு வருகிறது. உலகின் பல நாடுகளில் ஓய்வுதிய நிலை பற்றிப் பகுப்பாய்வு செய்து ‘ஓய்வூதியக் குறியீடு’ ஒன்றைத் தயாரிக்கும் பணியில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இம்மையம் தயாரிக்கும் குறியீடு ‘மெல்பர்ன் மெர்சர் உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு’ (MMGPI) என்று அழைக்கப்படுகிறது. 40க்கும் மேற்பட்ட அம்சங்களை உள்ளடக்கி ஒவ்வொரு நாட்டின் ஓய்வுகாலப் பணப் பலன்களை குறியீடு செய்வது தான் இந்த எம்.எம்.ஜி.பி.ஐ-யின் முதன்மையான நோக்கமாகும். ஒவ்வொரு நாட்டின் ஓய்வூதியத் திட்டத்தில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதும், எவ்வெவ் வகையில் ஓய்வூதியத் திட்டத்தில் இயன்ற சீர்திருத்தங்கள்

செய்து, போதுமான ஓய்வு காலப் பணப் பலன்கள் கிடைக்கச் செய்வதும், நீண்ட காலப் பயன்பாட்டில் ஒரு உறுதித்தன்மையை ஏற்படுத்துவதும், அதனடிப்படையில் ஓய்வூதியத் திட்டத்தின் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்துவதும் இக்குறியீட்டின் இரண்டாவது நோக்கமாகும்.

உண்மையில் தாராயமயமாக்கலின் சூழ்நிலைக்கேற்ப ஓய்வூதியச் சீர்திருத்தங் களைச் செய்ய ஒவ்வொரு நாட்டுக்கும் அறிவுறுத்துவதே இக்குறியீட்டின் நோக்க மாகும். எதிர்பாராதவிதமாக 2016ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அட்டவணையில், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாடுகளின் பட்டிய லில் இந்தியா கடைசி இடத்தில் வைக்கப்பட் டுளள்து. 27 நாடுகளை உள்ளடக்கிய ஆண்டு ஆய்வில் இந்தியா 25வது இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பின் மீது செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்தத் தாக்குதல் என்பது பின்வருமாறு: 1. ஓய்வு பெறும் வயதை உயர்த்துவது 2. அரசு மற்றும் வேலையில் அமர்த்துபவருக்கு ஓய்வூதியம் வழங்கும் பொறுப்பிருந்தால், அந்த நிர்ணயிக் கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்களையே ஒழித்துக் கட்டுவது 3. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு மேலும் மேலும் மாறிச் செல்வது 4. ஓய்வூதிய நிதிக்குத் தொழிலாளியின் பங்களிப்பை அதிகரிப்பது 5. அவ்வாறு திரட்டப்பட்ட ஓய்வூதியத்திற்கான பணக் குவியலை முதலீடு செய்வதற்காக அவற்றை பன்னாட்டு கம்பெனிகளுக்கு மாற்றுவது 6. ஊக வணிக முதலீட்டை வலுப்படுத்துவதையும் ஓய்வு பெற்றவர்களின் நீண்டகால நிதி நிலையைப் பலவினப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு அப்பணத்தை பங்கு வணிகத்தில் ஈடுபடுத்துவது.

இதன் ஒட்டுமொத்த விளைவு என்பது அரசுகளும், வேலைக்கு அமர்த்துபவர்களும் தங்களது ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற பொறுப்பைக் கைவிடுவது மட்டுமல்லாது, மூத்த குடிமக்களை அவர்களின் கடைசிக் காலத்தில் ஒரு நிச்சயமில்லாத வாழ்க்கைக்குள் தூக்கி எறிந்து விடுவதுமாகும். ஓய்வூதியர்கள் தங்களது வாழ்நாள் சேமிப்புக் களை எல்லாம் இழந்து விடும் அபாயத்துடன், புதிய தாராளமயக் கொள்கைகள் ஓய்வுதிய தாரர்களின் வாழ்க்கையில் பொருளாதார நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலைமை நிறுத்தப்பட வேண்டும். ஓய்வூதியர் மற்றும் ஓய்வு பெற்றோரின் பாதுகாக்கப்பட்ட ஓய்வுகாலம் உறுதி செய்யப்பட வேண்டும். பன்னாட்டு நிறுவனங் களுக்காக எல்லா அரசு இயந்திரமும் இயங்க வேண்டும் என்ற கொள்கை எதிர்க்கப்பட வேண்டும். எல்லா வகையிலும் அரசுகள் தங்களின் வயதான மக்கள் தொகையினரின் அனைத்துத் தேவைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும். இதனை எல்லாம் உறுதி செய்திட எல்லா நாடுகளிலுமுள்ள ஓய்வூதியர் களும், பணி நிறைவு பெற்றவர்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். ஓய்வூதியர் மற்றும் பணி நிறைவு செய்தோரின் வர்க்கப் பார்வையுடன் கூடிய ஒரு அமைப்பு வலுப்படுத்தப்பட்டாலொழிய ஒன்றுபட்ட போராட்டம் என்பது தன்னிச்சையாக நடந்துவிடாது. அகில உலக தொழிற் சங்கங் களின் பேராமைப்பால் முன்மொழியப்பட் டுள்ள ஓய்வூதியம் மற்றும் பணி நிறைவு பெற்றோரின் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு, வர்க்கப் பார்வையுடன் கூடிய மூத்த குடிமக்களின் அமைப்பு ஆகும். அகில இந்திய ஓய்வூதியர் மற்றும் பணி நிறைவு செய்தோரின் சங்கம் இந்த பன்னாட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்புடன் இணைந்து செயல்படுகிறது. எனவே, ஓய்வூதியர் மற்றும் பணி நிறைவு செய்தோரின் இந்தப் பன்னாட்டு அமைப்பை ஓய்வூதியர்கள் வலுப்படுத்த வேண்டும். ஓய்வூதியர்களுக்கான நியாயமான போராட்டத்தில் அவர்களும் உழைக்கும் மக்களுடன் முழுமையாக ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

'பென்ஷனர்ஸ் போஸ்ட்' இதழிலிருந்து
தமிழாக்கம் : **க.பாண்டி**
முன்னாள் மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

# பகத்சிங்... நினைவலைகள்

**[பகத்சிங் நினைவு நாள் மார்ச் 23]**

பெரணமல்லூர் **சேகரன்**

"மனிதன் என்பவன் ஒரே இடத்தில் நிற்கும் மரமல்ல. உணர்ச்சிப் பிழம்பான ஓர் அசையும் பிராணி. இயங்கிக் கொண்டே இருக்க வேண்டியது மனிதனின் கடமை. இயங்க மறுப்பவன் மனிதன் அல்ல"

- ராகுல சாங்கிருத்தியாயன்

பகத்சிங் என்னும் மகத்தான இளைஞன் அப்படித்தான் உணர்ச்சிப்பிழம்பாய்த் திகழ்ந்தான் எனின் மிகையன்று. எனினும் பகத்சிங்கிடம் அறிவில் தெளிவும் கொள்கையில் உறுதியும் பின்னிப் பிணைந்திருந்தது.

பகத்சிங் என்ற பெயர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கை மணியாய் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால், இன்றும் ஆளும் வர்க்கம் முடிந்த மட்டில் பகத்சிங்கை இருட்டடிப்பு செய்கிறது.

"எத்தனை தருணங்கள் உன் வாழ்வில் இருந்தன என்று கேட்காதே. ஒவ்வொரு தருணத்திலும் நீ எப்படி வாழ்ந்தாய் என்று கேள்" என்னும் உருதுக் கவிதையைப் போல பகத்சிங் வாழ்ந்த காலம் குறைவே எனினும் எப்படி வாழ்ந்தார் என்பதை ஆய்வு செய்யும் போது இளைஞர்களுக்கு வழிகாட்டியாய்த் திகழும் அளவிற்கு சரியான பாதையில் அவரது பயணம் அமைந்திருந்தது எனலாம்.

பகத்சிங்கை சிறையிலிருந்து விடுவிக்க அவரின் தந்தை முயற்சித்தபோது எப்படியாவது விடுதலை கிடைத்தால் போதும் என்று சும்மா இருக்கவில்லை. தந்தையைக் கண்டித்து பகத்சிங் கடிதம் எழுதியது அவருடைய தெளிந்த சிந்தனையைப் பறைசாற்றியது.

அவர் வாழ்ந்த காலத்தில் நாத்திகராகத் திகழ்தல் அரிது. அதிலும் சோதனைகளும் பிரச்சினைகளும் அடுக்கடுக்காய் வந்து தாக்கும்போதும் ஏக்கப் பெருமூச்சாய் மதத்தையும் கடவுளையும் நாடாமல் இறுதி வரை நாத்திகராகத் திகழ்ந்தார் பகத்சிங். மேலும் 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' என்னும் நூலையும் எழுதினார்.

தொழிலாளிகளையும் விவசாயிகளையும் திரட்டுவதுதான் தான் கொண்ட இலட்சியத்தை அடைய உறுதியான வழிமுறை என்பதை பகத்சிங் மறக்கவில்லை. அதற்கு லெனினின் 'இனி செய்ய வேண்டியது என்ன' என்னும் நூலை பகத்சிங் சிறையில் படித்தது பெரிதும் துணை புரிந்தது.

பகத்சிங் இந்திய நாடாளுமன்றத்தில் வெடிகுண்டை வீசியபோதும்கூட அதில் யாரையும் உயிர்பலியாக்க வேண்டும் என்கிற தீய நோக்கம் இருக்கவில்லை. மாறாக, இந்திய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவே அவ்வாறு முடிவு செய்து அமுல்படுத்தினார். மேலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அப்புறப்படுத்திவிட்டு இந்திய முதலாளிகளை அமர வைப்பதால் சமூக மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது என்பதில் தெளிவாக இருந்தார். சுரண்டல் ஆதிக்க நுகத்தடியிலிருந்தும் அந்நிய ஆதிக்க நுகத்தடியிலிருந்தும்



ஒருசேர விடுதலை பெற வேண்டும் என்பதே பகத்சிங் நோக்கமாகவும் பரப்புரையாகவும் இருந்தது.

தனிநபர் சாகசம் இந்தியாவிற்கு முழு விடுதலையைத் தந்து விடாது. துணிவுமிக்க அர்ப்பணிப்புணர்வு கொண்ட ஆயிரக் கணக்கான இளைஞர்களால் இந்தியாவிற்கு முழு விடுதலையைக் கொண்டுவர முடியும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருந்தார் பகத்சிங். மேலும், தொழிலாளி-விவசாயிகளின் கட்சியின் அவசியம் குறித்தும் உணர்ந் திருந்தார்.

பகத்சிங் அளவற்ற அறிவுத்தேடலுடனும் எல்லையற்ற மனஉறுதியுடனும் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சாதி, மத, இன, எல்லை கடந்து புதிய உலகக் கண்ணோட் டத்துடனும், சோசலிச இலட்சியத்துடனும் இந்திய இளைஞர்களுக்கு நம்பிக்கை யொளியாய்த் திகழ்ந்தார் பகத்சிங்.

"நம்பிக்கை என்பது புயற்காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல. அடிபெயரா இமயத்தைப் போன்றது" என்றார் காந்தியடிகள்.

நம்பிக்கை என்பது பகத்சிங் மனதில் இமயம் போன்று உயர்ந்து நின்றது. எனவேதான் மனஉறுதியுடன் இந்திய விடுதலை என்னும் இலட்சியத்திற்கான பயணத்தில் அவரையொத்த இளைஞர்களுடன் இணைந்து போராடினார். அவர் தன்னை போர் வீரனாய் நடத்தி குண்டுகளால் துளைத்து மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டுமென பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் கோரிக்கை வைத்தார். ஆனால், ஏகாதிபத்தியமோ பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவரையும் 1931ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் நாள் தூக்கிலிட்டது.

"மனிதனை மனிதனாலும் தேசம் தேசத் தாலும் சுரண்டப்படும் நயவஞ்சக வளர்ச்சிப் போக்கின் கடைசிக் கட்டமே ஏகாதிபத்தியம்" என்ற பகத்சிங்கின் வரிகள் இன்றளவிலும் நடைமுறை உண்மையாகவே உணர்ந்து வருகிறது. மனிதகுலம் மானுடத்தை உயர்த்தவும் பகத்சிங்கின் கனவான சோசலிச சமூகத்தை அமைக்கவும் அர்ப்பணிப்புணர் வுடன் செயல்பட சபதமேற்போமாக! ❖

## பணி நிறைவு - பாராட்டு விழா

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் ந.சேகர் 31.01.2017 அன்று உதவி இயக்குநர் நிலையில் பணி நிறைவு பெற்றார். அவருக்கு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் வேலூர் மாவட்ட மையம் சார்பில் பணி நிறைவு பாராட்டு விழா, வேலூர் ஏலகிரி அரங்கில் மாவட்டத் தலைவர் எஸ்.ஜோசப் கென்னடி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் கே.எம்.நேரு வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் சி.ஏ.ராமன், திட்ட இயக்குநர் பொ.பெரியசாமி முன்னிலையில் நினைவுப் பரிசு வழங்கி மாநில பொதுச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி சிறப்புரை யாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் பா.ரவி, இந்நாள் மாநில துணைத் தலைவர் ச.பாரி, மாநிலப் பொருளாளர் வி.நாகராஜன், திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் மு.பாஸ்கரன், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் பொ.சார்லஸ் சசிகுமார், அரசு ஊழியர் சங்க வேலூர் மாவட்டத் தலைவர் க.சரவணராஜ், வளர்ச்சிப் பணி அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.முத்துராமன், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். முன்னாள் பொதுச் செயலாளர் பெரணமல்லூர் சேகரன் (எ) ந.சேகர் ஏற்புரை வழங்கினார். வேலூர் மாவட்டச் செயலாளர் ச.வெங்கிடாசலம் நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்ட முன்னாள் செயலாளர் எஸ்.விஜயராகவன் அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா மாவட்டத் தலைவர் எம்.மகாவிஷ்ணன் தலைமையில் 28.1.2017 அன்று நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் என்.வெங்கடாசலம் வரவேற்றார். மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன், ஓய்வூதியர் சங்கத்தின் வி.மோகன்குமார், பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்கத்தின் என்.சந்திரன், கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் ஆர்.தாமோதரன், அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் பாலகுமாரன், ஓய்வூதியர் ஆசிரியர் சங்கத்தின் பிச்சுமணி, சம்பத்குமார், சத்துணவு ஊழியர் சங்கத்தின் பாலகிருஷ்ணன், வேம்புசாமி, ஏஒஓ சங்கத்தின் எம்.சிவப்பிரகாசம், பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் நாராயணன், சாலைப் பணியாளர் சங்கத்தின் சி.விஜயகுமார், கரூர் 1 வட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன், சிஐடியு மாவட்டத் தலைவர் ஜி.ஜீவானந்தம், ஏஐபிஇஏ சங்கத்தின் ஐ.வெங்கடாசலம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்டச் செயலாளர் ஜெ.சக்திவேல் நன்றி கூறினார். ❖

# மனங்கவர்ந்த "மக்களின் நீதிபதி"

குணாஜி

ஆஜானுபாகுவான தேகம், அரைநுரை கேசம், ரோஜாப்பூ நிறம், ராஜாதி ராஜாவின் அறம். இன்னும்கூட சொல்லிக்கொண்டே போகலாம் அவரைப் பற்றி. அவர் உருவத்தில் இருந்த கம்பீரம் உத்தரவு களிலும் இருந்தது, நடையில் காட்டிய மிடுக்கு, போட்ட தடையாணைகளிலும் தெரிந்தது. இரண்டரை ஆண்டுகள் அவர் கோலேச்சிய வெண்கொற்றக்குடையின் மேல் ஒரு ஒளிவட்டம் மிதந்தது. பிடித்திருந்த செங்கோலில் சூரியப் பிரவாகம் சுடர்ந்தது. எதுவும் மிகையில்லை. எல்லாம் நிதர்சனம். இவையெல்லாம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றி, உச்சநீதிமன்ற நீதியரசராகப் பொறுப்பேற்றிருக்கும் நீதியரசர் சஞ்சய் கிஷன் கௌல் அவர்களைப் பற்றியவை என்றால் சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகளை கவனித்து வரும் எவரும் சரியென்றே சிரமசைப்பார்கள்.

அவர் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க வந்தபோது சென்னை உயர்நீதி மன்றத்தின் நிலை மிக மோசமாக இருந்தது. இங்கிருந்து உச்சநீதிமன்றத்திற்கு பதவி உயர்வில் நீதிபதி ஆர்.கே.அகர்வால் செல்லும் போது, "சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதியாக வர பிற மாநில நீதிபதிகள் தயங்கு கின்றனர்" என்று வெளிப்படையாக பேசிவிட்டுச் சென்றார். அவர் சொன்னது சரிதான் என்று எண்ணுமளவுக்கு வந்த உடனே பல சவால்களை நீதியரசர் கௌல் சந்திக்க வேண்டி வந்தது. ஆனாலும் அவர் எந்த சலசலப்புக்கும் அஞ்சாமல் கொஞ்சமும் உணர்ச்சி வசப்படாமல் தீர்வுகாண வேண்டிய பிரச்சனைகளுக்கு தீர்வு காட்டினார். தீர்த்துக்கட்ட வேண்டிய பிரச்சனைகளை தீர்த்துக் கட்டினார்.

2014 ஜூலையில் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றதிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அவர் சில வழக்குரைஞர்களுடன் உரச வேண்டி யிருந்தது. தலைக்கவசம் அணிவது கட்டாயம் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக போராட்டம் நடத்தி நீதிபதிகளுக்கு எதிரான தீர்மானங்களை இயற்றிய மதுரை வழக்கறிஞர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உயர்நீதிமன்றம் தானாக விசாரணைக்கு எடுத்து மதுரை வழக்கறிஞர் சங்க நிர்வாகிகளை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டபோது சிலநூறு வழக்கறிஞர்கள் பேருந்தில் மதுரையிலிருந்து சென்னை உயர்நீதி மன்றம் வந்து நீதிமன்ற வளாகத்திற்குள் சில விரும்பத்தகாத நிகழ்வுகளை அரங்கேற்றினர். இதை நீதிமன்ற பாதுகாப்பில் இருந்த காவலர் களால் தடுக்க இயலவில்லை. சிலநாட்கள் கழித்து, சில வழக்கறிஞர்கள் தலைமை நீதிபதியின் நீதிமன்றத்தில் நுழைந்து தமிழை நீதிமன்ற வழக்காடு மொழியாக மாற்றக்கோரிய பதாகைகளை கைகளில் ஏந்தி நாள் முழுவதும் நீதிமன்ற அறையை விட்டு வெளியேறாமல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்து, "காஷ்மீருக்கு திரும்பிப் போ" என கோஷம் எழுப்பினர். அடுத்த நிகழ்வாக சில வழக்கறிஞர்கள் அவருடைய பணியறைக்குள் நுழைந்து அவர் அலுவல் செய்ய விடாமல் குறுக்கீடு செய்தனர். மேலும் சில வழக்குரை ஞர்கள் அவர் குடியிருந்த பங்களாவிற்குள், பாதுகாப்பு வளையத்தை மீறி நள்ளிரவில் முற்றுகை நடத்தி வாசலில் வைக்கப்பட்டிருந்த பூத்தொட்டிகளை வீசி உடைத்தனர்.

இவற்றுக்கெல்லாம் பொறுமையாக விடை சொன்னார் கவுல். முதலில் உயர்நீதிமன்றத் திற்கு மத்திய தொழில் பாதுகாப்புபடை பாதுகாப்பு



வழங்க வேண்டும் என்று அரசுக்கு உத்தர விட்டார். இந்த உத்தரவுக்கு அரசும், வழக்கறிஞர்களும் எதிர்வினையாற்றினர். உயர்நீதி மன்றத்திற்கு மாநில காவல் துறை பாது காப்பே சிறந்தது என வழக்கறிஞர்களிட மிருந்து சிறு சலசலப்பு

எழுந்தது. உயர்நீதிமன்றத்திற்கு எந்த வகையான பாது காப்பு வேண்டும் என்பது உயர்நீதிமன்றத் தின் விருப்பம் அதில் அரசோ, வழக்கறிஞர்களோ தலையிடுவது சரியல்ல என்றார் தலைமை நீதிபதி. ஆனால் அதை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்சநீதி மன்றமோ அரசின் தலையில் குட்டு வைத்து உயர்நீதி மன்றம் கேட்கும் பாதுகாப்பு ஏற்பாடு களை செய்துதர வேண்டியது தமிழக அரசின் கடமை என வழக்கை தள்ளுபடி செய்தது.

பழமையும் மரபும் வாய்ந்த ஒரு உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள் சிலர் கையில் கோரிக்கை பதாகைகளுடன் நாள் முழுவதும் உள்ளிருப்பு போராட்டம் நடத்தியபோது அவர்களை காவல்துறையினர் அப்புறப்படுத் தாமல் வேடிக்கை பார்த்ததற்குக் காரணம் நாள்தோறும் ஒவ்வொரு வழக்கிலும் அரசின் தவறான செயல்பாடுகளை கேள்வி கேட்டதும் துறைச் செயலாளர்கள் நீதி மன்றத்தில் நேரடியாக ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பித்ததும் தான் என்கிற செய்தி உயர்நீதிமன்றத்திற்கு வரும் வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களிடையே உலா வந்தது. நடுநிலை வழக்கறிஞர்கள், தலைமை நீதிமன்ற அறைக்குள்ளேயே பதாகை ஏந்தி வாயில் கறுப்புத் துணி கட்டி போராட்டம் நடத்திய சில வழக்கறிஞர்களின் செயல் அதீதமானது என்றும் அதைக் கண்டும் கைகட்டி வேடிக்கை பார்த்த காவல்துறையின் செயல் அராஜகமானது என்றும் கண்டித்தனர். அதேபோல தலைமை நீதிபதியின் வீட்டு காம்பவுண்டிற்குள் வழக்கறிஞர்கள் நள்ளிரவில் முற்றுகையிட்டு அங்கிருந்த பூத்தொட்டிகளை உடைத்ததும் வீட்டை முற்றுகையிட முயற்சித்ததுமான செயலானது ஒரு மாநிலத்தின் தலைமை நீதிபதியின் வீட்டுக்குகூட உரிய பாதுகாப்பு காவலர்களை நிறுத்தாமல் காவல்துறை அலட்சியப் போக்குடன் செயல் பட்டது எனும் அவப்பெயரை காவல்துறைக்கு ஏற்படுத்தியது. இந்நிகழ்வு இந்தியா முழுவதும் தமிழகத்தை உற்று நோக்க வைத்தது. வழக்கறிஞர்களின் இந்த சட்டத்திற்கு மீறிய செயல்களை தமிழ்நாடு பார் கவுன்சில் கண்டும் காணாமல் இருந்ததால் இந்திய பார் கவுன்சில் நடவடிக்கை எடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைத்தது. வழக்கறிஞர்கள் மீதான நடவடிக்கையை எதிர்த்து வழக்குரைஞர் சங்கங்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டன. அவர்கள் மீதும் இந்திய பார்கவுன்சில் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. அதன் பிறகுதான் வழக்கறிஞர்களின் போராட்டம் மெல்ல மெல்ல வலுவிழந்தது.

ஒருபுறம் தவறு செய்யும் வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை இன்னொரு புறம் நீதிமன்ற உத்தரவுகளை செயல்படுத்தாமல் இருந்த அரசுத்துறை செயலர்கள் முதற்கொண்டு அரசு அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு என சாட்டையை சுழற்ற ஆரம்பித்தார் தலைமை நீதிபதி கௌல். அதேபோல் நீதிமன்றத்தில் பட்டிய லிடப்படும் வழக்குகளில் தகுந்த காரணமுமின்றி வாய்தா கேட்டால் காஸ்ட் என்று சொல்லப்படும் அபராதம் விதிக்க ஆரம்பித்தார். இதன்காரணமாக அவருடைய நீதிமன்றத்தில் பட்டியலிடப்படும் வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் வழக்கை நடத்த தயாராகி வரவேண்டியிருந்தது. இது பல வழக்குகளை விரைந்து முடிக்க வழி கோலியது. அவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தியதோடல்லாமல் உயர்நீதி மன்றத்தின் மாண்பும் உயர வழிவகுத்தது.

வழக்கறிஞர்கள், அரசு நிர்வாகம் ஆகிய வற்றில் மட்டுமல்ல தன் தலைமையின் கீழ் செயல்பட்ட நீதித்துறையிலும் ஆரோக்கிய மான மாற்றங்களை ஏற்படுத்தினார் நீதியரசர் கௌல். ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி அவற்றுக்கு போதுமான அடிப்படை ஆதாரம் இருந்த கீழமை நீதிமன்ற நீதிபதிகள் பலரை சத்தமின்றி வீட்டுக்கு அனுப்பினார். சில நீதிபதிகளுக்கு பதவிநீட்டிப்பு தராமல் பாடம் புகட்டினார். அதேபோல்




**தண்ணீர்**

தாத்தா ஆற்றில் பார்த்தார்
அப்பா கிணற்றில் பார்த்தார்
நாம் குழாயில் பார்க்கின்றோம்
மகன் பாட்டிலில் பார்க்கின்றான்
பேரன் எங்கு பார்ப்பானோ?
தண்ணீரை சேமியுங்கள்!

தன்னுடன் பணியாற்றும் சகநீதியரசர்கள் அவர்களுடைய சொந்த வாகனங்களில் சுழல் விளக்குகள் பொருத்துவதை தவிர்க்கச் சொன்ன தோடு, அலுவலக வாகனத்தை அலுவலக பயன் பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்துமாறும் தேவை யற்ற நேரங்களில், தேவையற்ற இடங்களில் உயர்நீதிமன்ற இலச்சினை பொருத்திய அலுவலக கார் நிற்பது நீதித் துறையின் மாண்பை கெடுத்துவிடும் என்றும் அறிவுறுத்தினார். அதேபோல் உயர்நீதிமன்ற மற்றும் கீழமை நீதிமன்ற ஊழியர்கள் தங்கள் வாகனங்களில் 'உயர்நீதிமன்றம்' என்றோ 'நீதிமன்றம்' என்றோ ஸ்டிக்கர்கள் ஒட்டக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார். மேலும் இந்தியா முழுவதிலுமுள்ள கீழமை நீதிமன்ற ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வலியுறுத்திய ஷெட்டி கமிஷன் பரிந்துரைகளை பெரும்பாலான மாநிலங்கள் அமல்படுத்திவிட்ட நிலையில், கடந்த 13 ஆண்டுகளாக தமிழக கீழமை நீதித்துறை ஊழியர்களுக்கு அதை வழங்காமல் சாக்கு போக்கு காட்டி வந்த தமிழக அரசையும் அதன் செயலாளர்களையும் உறுதியான உத்தரவுகள் மூலம் அமல்படுத்த வைத்ததுடன் அரசாணை களும் பரிந்துரையின்படி வெளியிடப்பட் டுள்ளனவா என்ற கண்காணிப்பும் செய்தார். இதனால் கீழமை நீதிமன்றங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கௌரவமான பதவி உயர்வுகளும் 10 சதவீதத்திற்கு மேல் கூடுதல் பணியிடங்களும் பெறமுடிந்துள்ளது. இந்த நடவடிக்கைகளால் நீதிமன்ற ஊழியர்கள் மத்தியில் அவர் மீதான மதிப்பும் மாண்பும் இன்னும் உயர்ந்தது.

பொதுநல வழக்குகள், அரசின் நிலைப் பாட்டை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், உயர்நீதிமன்றமே தானாக முன் வந்து எடுத்த வழக்குகள் போன்றவற்றினால் ஒரு கட்டத்தில் தமிழக அரசை தலைமை நீதியரசர் கௌல் நடத்துவது போன்ற தோற்றம் நாட்டு மக்கள் மனதில் எழுந்தது. அரசாங்கத் தின் நடவடிக்கைகளை கேட்டு வரும் மனுக்களின் மீதும், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் நடவடிக்கை எடுக்கப்படாத வழக்குகளிலும், நீதிபதி கவுல் அரசுக்கு கடுமையான உத்தரவுகளை யும், கண்டனங்களையும் தெரிவித்தார். ஒரு கட்டத்தில், ''நீதிமன்ற உத்தரவுகளை புறந்தள்ள நேர்ந்தால், அரசுத்துறை செயலாளர்கள் தினமும் ஒருமணிநேரம் உயர்நீதிமன்றம் வந்து நிலுவை மனுக்களின் மேல் எடுத்த நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க உத்தரவு பிறப்பிக்க நேரிடும்.'' எனவும் எச்சரித்தார்.

''எழுத்தாளர்களுக்கு உள்ள எழுத் துரிமையை பறிக்க யாருக்கும் உரிமை இல்லை குறிப்பிட்ட எழுத்தாளரின் படைப்பு சரியில்லை என்றால் அதை படிக்காமல் தூக்கி எறிந்து விடுங்கள். அதற்காக எழுத்தாளரை தண்டிக்கக்கூடாது; மாதொரு பாகன் படைப்பில் எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தையும் இழிவுபடுத்தும் நோக்கில் எதுவும் எழுதப்படவில்லை.'' என்ற பரபரப்பு தீர்ப்பும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் அவசர கதியில் அமர்த்தப் பட்ட 11 உறுப்பினர்களில் ஒருவர் நீதித்துறையில் மாவட்ட நீதிபதி பதவியிலிருநது வெளியேற்ற பட்ட நீதிபதி என்றும், மற்றொருவர் தனியார் கல்லூரி ஆசிரியர், இன்னொருவர் மின்வாரியப் பொறியாளர் என்பதுடன் இவர்களை நியமனத்தை ஒரே நாளில் செய்தது எந்த அடிப் படையில் என்ற கேள்வி எழுப்பி அதற்கு அரசுத் தரப்பில் சரியான ஆதாரங்கள் தாக்கல் செய்யாத தால் அந்த நியமனங்களை ரத்து செய்து உத்தர விட்டதும், தர்காக்களில் முஸ்லிம் மதகுருமார்கள்

## பணி நிறைவு வாழ்த்துக்கள்



**அரசு ஊழியர் சங்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மாநிலச் செயலாளருமான ஆர்.குமார் அவர்கள் 28.02.2017 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு காலத்திலும் அவருடைய சமூகப் பணி தொடர தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

நடத்தும் ''சஹாரியா கோர்ட்''டில் அளிக்கப்படும் முடிவுகளை சட்டப்படியாக அங்கீகரிக்க முடியாது என்றும், கோவில், சர்ச், மசூதி போன்ற கடவுள் வழிபாடு நடக்கும் இடங்கள், வேறுமாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள் ளும் இடங்களாக மாறினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டதும், விவசாய விளை நிலங்களை வீடுகட்டும் நிலங்களாக மாற்றுவதை தடுத்தும், அங்கீகாரம் பெறாத நிலங்களில் கட்டப்பட்டுள்ள கட்டுமானங் களை பதிவு செய்யக் கூடாது என்றும் மீறி பதிவு செய்தால் சம்பந்தப்பட்ட பதிவாளர் மீது கிரிமினல் நடவடிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உத்தர விட்டும், அவற்றிற்கு விலக்கு கோரி ரியல் எஸ்டேட் உரிமையாளர்களும், கட்டிட விற்பனையாளர்களும் நீதிமன்றத்தில் பலமுறை கெஞ்சிக் கேட்டும் கட்டிய கட்டுமாணங்கள் வரையிலாவது விற்றுவிட அனுமதி கோரியும் தலைமை நீதிபதி ஒருதுளி கூட அசைந்து கொடுக்காததும், சமூகத்தின் மீதும், மக்களின் மீதும், சட்டங்கள் மீதும் அவருக்கிருக்கும் ஆழ்ந்த பற்றினை வெளிப்படுத்தும் நிகழ்வுகளாகும்.

தலைமை நீதிபதி பொறுப்பிலிருந்து உச்சநீதி மன்ற நீதிபதியாக பொறுப்பேற்கச் செல்லுமுன் நடந்த பிரிவு உபசார விழாவில் அவர் ''தமிழக கலாச்சாரமும் பாரம்பரியமும் தலைசிறந்த ஒன்று இதைக்கண்டு நான் ஆச்சர்யமடைந்தேன். காதல் வீரம், சுய மரியாதை எல்லாம் தமிழகத்தின் அடையாளம். 5000 ஆண்டு தொன்மையான பாரம்பரிய மொழி தமிழ்மொழி. அத்தனை பாரம்பரியம், கலாச்சாரம் மிக்க தமிழகத்தில் தலைமை நீதிபதியாக பணியாற்றியது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நான் தமிழகத்தை எனது இரண்டாவது தாய்வீடாக கருதுகிறேன்.'' என்று உருக்கமாக பேசினார். மேலும், ''ஆரம்பத்தில் இங்குள்ள வழக்கறிஞர்களை நான் சரியாக புரிந்துகொள்ளவில்லை. அதே போல் அவர்களும் என்னை புரிந்துகொள்ள முடியவில்லை. தற்போது அந்த நிலை மாறிவிட்டது. நான் எப்படி நீதிபதியாக செயல்பட்டேன் என்பதை வழக்கறிஞர்களாகிய நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.'' என்றார். உண்மைதான் முதலில் அவருடன் மோதல்போக்கை கடைபிடித்த சில வழக்கறிஞர்கள் கூட நாளடைவில் அவருடைய சமூக அக்கரை கொண்ட உத்தரவுகளாலும், அரசாங்கத்தை இடித்துரைத்து சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தியதாலும் அவரின் செயல்பாடுகளில் காதல் கொள்ள ஆரம் பித்தனர். எங்கிருந்தோ வந்து, தமிழக மக்களின் இதயம் கவர்ந்த நீதியரசர் சஞ்சய் கிஷன் கௌல் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தார் என்பதை விட ''மக்களின் நீதிபதி'' யாகத் திகழ்ந்தார் என்பதே ஆகப் பொருத்தமான அடைமொழியாக அமையும். ❖


**அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை**
**நமுனா (18ஆம்) பாடப் பிரிவு**

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | சென்னை-5 |
| வெளியிடும் காலம் | : | மாத இதழ் |
| அச்சிடுபவர் | : | என்.சீனிவாசன் |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | வைகை பிரிண்டர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ் சென்னை-15 |
| வெளியிடுபவர் | : | இரா.பாலசுப்பிரமணியன் |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஆசிரியர் | : | மு.சுப்பிரமணியன் |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஒரு சதவீதத்துக்கு மேல் பங்குத்தொகை அளித்துள்ளவர்கள் | | தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |

இரா.பாலசுப்பிரமணியன் என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை **இரா.பாலசுப்பிரமணியன்**
1.3.2017 வெளியிடுபவர்

# பொதுத் துறை வங்கிகள் தனியார்மயமாகும் அபாயம்!

**செ**ல்லா நோட்டு பிரச்சினையால் உயிரிழந்த 112 பொதுமக்கள், 12 வங்கி ஊழியர்கள் மற்றும் 3 தபால் ஊழியர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்குவது பற்றி 2017 பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி மத்திய அரசால் சமர்ப் பிக்கப்பட்ட பட்ஜெட்டில் ஒரு வார்த்தைகூட சொல்லப்படவில்லை. செல்லா நோட்டு பிரச்சினையின் காரணமாக சாதாரண மக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாயினர். ஒரு கோடிக்கும் மேலான தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளனர். விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 8 முதல் கடந்த 3 மாதங்களாக வங்கிகளின் அனைத்து பணிகளும் முடங்கிவிட்டன. புதியதாக கடன் கொடுப்பது, கொடுத்த கடனை வசூலிப்பது போன்ற எந்த பணியும் முற்றிலுமாக நடைபெறவில்லை. இதனால் வங்கிகளின் வியாபாரம் கடும் சரிவை சந்தித்துள்ளது. அதையொட்டி வங்கிகளின் லாபமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எனவே, செல்லா நோட்டு பிரச்சினையினால் ஏற்பட்ட நஷ்டத்தை அரசாங்கம் உடனடியாக ஈடுகட்ட வேண்டுமென்று கோரிக்கையை வங்கி ஊழியர் சங்கங்கள் முன்வைத்துள்ளன.

இது உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கை களை முன்வைத்து பொதுத்துறை வங்கிகள், தனியார் துறை வங்கிகள், கிராம வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், ரிசர்வ் வங்கி உள்ளிட்ட அனைத்து வங்கிகளிலும் பணிபுரியும் பத்து லட்சம் ஊழியர்களும், அதிகாரிகளும் 2017 பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரு லட்சத்து 15 ஆயிரம் வங்கிக் கிளைகளிலும் பணிகள் ஸ்தம்பித்தன.

மத்தியில் உள்ள பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதலே பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்குவதிலும், போட்டி என்ற பெயரில் புதிய தனியார் வங்கிகளை ஊக்குவிப்பதிலும் தீவிரம் காட்டி வருகிறது. இதன் காரணமாக சாதாரண மக்களுக்கு பயன்பட்டு வரும் பொதுத்துறை வங்கிகள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதேபோல் கிராம வங்கிகளுடைய மொத்த பங்குகளில் 49 சதவீதத்தை தனியாருக்கு விற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டு கிராம வங்கிகளின் பணிகளை சாதாரண மக்களுக்கு பயன்பட விடாமல் செய்வதற்கான வேலையிலும் மத்திய அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. கூட்டுறவு வங்கிகளுக்கு தேவையான மூலதனத்தை மறுப்பதன் மூலமாகவும், அவ்வங்கிகளுக்கு வருமான வரி போடுவதன் மூலமாகவும், 30,000 பிரதம வேளாண் கூட்டுறவு சங்கங்களை இழுத்து மூட முயற்சிப்பதன் மூலமாகவும், கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும், விவசாயிகளுக்கும் பயன்பட்டு வரும் கூட்டுறவுத் துறையை அனைத்து வகையிலும் நலிவடைய செய்யும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

பெரும்பாலான வங்கிப் பணிகள் வெளியாட்களுக்கு விடப்படுகின்றன. இதன் காரணமாக பொதுமக்களின் பணத்திற்கான

## பயிற்சி வகுப்பு

**க**ரூர் மாவட்ட மையத்தின் சார்பில் முன்னணி ஊழியர்கள், மாவட்ட, வட்ட நிர்வாகிகளுக்கான “பயிற்சி வகுப்பு” மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. “போராட்டங்களும் படிப்பினைகளும்” என்ற தலைப்பில் மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் வகுப்பு எடுத்தார். மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் வரவேற்றார். சந்திரன் நன்றி கூறினார். மாவட்ட நிர்வாகிகள் என்.வெங்கடாசலம், பி.திருநாவுக்கரசு, ஆர்.தாமோதரன், கே.சிவகாமி, பி.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 30 ஊழியர்கள் இப்பயிற்சி முகாமில் பங்கேற்றனர்.

பாதுகாப்பும், வாடிக்கையாளர்களின் ரகசியமும் ஆபத்துக்குள்ளாகின்றன.

44 தொழிலாளர் நலச் சட்டங்களை 5 பிரிவுகளாக சுருக்கி அதில் பல தொழிலாளர் விரோத ஷரத்துக்களை இணைத்து தொழிலாளர்களின் "வேலை நிறுத்தம் செய்யும் உரிமை" உட்பட அடிப்படை உரிமைகளையும் பறிப்பதற்கான முயற்சியில் மத்திய அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

தற்போது 6 லட்சம் கோடி ரூபாய் பொதுத்துறை வங்கிகளின் வராக் கடனாக உள்ளது. இது கூடிய விரைவில் சுமார் 9 லட்சம் கோடி ரூபாயாக உயர்வதற்கான ஆபத்து உள்ளது. இதில் 70 சதவீத வராக் கடன் ரூ. 1 கோடி மற்றும் அதற்கு மேல் கடன் வாங்கி திருப்பிக் கட்டாத கடனாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையாகும். இவர்களிடமிருந்து இத்தொகையை வசூலிக்க மத்திய அரசாங்கம் எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அதற்கு தேவையான சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ள தயாராக இல்லை. உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து ரூ.500 கோடி மற்றும் அதற்கு மேல் கடன் வாங்கி வசதி இருந்தும் திருப்பி கட்டாதவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும் என்ற சொன்ன வழிகாட்டுதலைக்கூட மத்திய அரசாங்கம் அமுல்படுத்தத் தயாராக இல்லை. வசதி இருந்தும் திருப்பி கட்டாதவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வங்கி ஊழியர் இயக்கம் நீண்ட காலமாக வைத்துள்ள கோரிக்கையையும் மத்திய அரசாங்கம் புறக்கணித்து வருகிறது.

மத்திய அரசாங்கத்தின் இத்தகைய மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கைவிட வலியுறுத்தியும் இவற்றுடன்,

- ⋆ செல்லா நோட்டு பிரச்சினையினால் வங்கி ஊழியர்களும், அதிகாரிகளும் செய்த கூடுதல் பணிக்கு தகுந்த ஈடு கட்டக் கோரியும்
- ⋆ 1972 பணிக்கொடை சட்டத்தில் உள்ள உச்ச வரம்பை நீக்கக் கோரியும்
- ⋆ பணிக்கொடை முழுவதற்கும் மற்றும் ஓய்வு பெறும்போது விடுப்புக்கான முழு தொகைக்கும் வருமான வரி விலக்கு கோரியும்
- ⋆ வங்கிகளில் இயக்குநர் குழுவில் உடனடியாக ஊழியர் மற்றும் அதிகாரிகள் பிரதிநிதிகளை நியமிக்கக் கோரியும்
- ⋆ 11வது ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனே துவங்கக் கோரியும்
- ⋆ ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் திட்டத்தில் உள்ளது போல் வணிக வங்கி ஊழியர்களுக்கான பென்ஷனிலும் முன்னேற்றம் கோரியும்
- ⋆ புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து அனைவருக்கும் பழைய பயனளிப்பு ஓய்வூதியம் வழங்கிடக் கோரியும்
- ⋆ கருணை அடிப்படையிலான வேலை திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரியும்
- ⋆ வங்கிகளில் எல்லா நிலைகளிலும் தேவையான ஊழியர்களை நியமனம் செய்திடக் கோரியும்
- ⋆ வாரம் 5 நாட்கள் வேலை கோரியும்

இந்த வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது.

**- சி.பி.கிருஷ்ணன்**
பொதுச் செயலாளர்
இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம் - தமிழ்நாடு

**ஆயுதம் ஏந்துவீர்!**



இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டும். ஆம்! மண்வெட்டி, கடப்பாறை, அரிவாள்! (ஏரி குளங்கள் தூர் வார வேண்டும்! மரங்கள் நட வேண்டும்)
**- விவேக்**

# இந்திய அரசியலமைப்புச் சட்டம் - ஒரு பார்வை

நெல்லை ஆறுமுகம்

### நாடாளுமன்றம்

நாடாளுமன்றம் நாட்டின் மிக உயர்ந்த அமைப்பாகும். தனக்குத்தானே விதிகளை வகுத்துக்கொண்டு, நெறிபடுத்திக் கொண்டு, சுதந்திரமாக செயல்படும். இதன் செயல் பாடுகளில் நீதிமன்றம் கூட குறுக்கிட முடியாது.

பொதுவாக நாடாளுமன்றம் வருடத்தில் மூன்று முறை கூட்டப்பட வேண்டும். குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தை கூட்டுவார். நிறுத்தி வைப்பார். கலைக்கவும் செய்ய அவருக்கு உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது.

கீழ்க்கண்ட அதிகாரங்கள் நாடாளுமன்றத் திற்கு கொடுக்கப்பட்டுள்ளன. 1. சட்டம் இயற்றுதல் 2. ஆட்சித் துறை 3. நிதி 4. நீதி 5. தேர்தல் 6. அமைப்பு மாற்ற அதிகாரம் 7. பிற அதிகாரங்கள்.

### சட்டமன்றம்

மாநிலத்திற்கான சட்ட கடமைகள் செய்ய அதிகாரம் பெற்ற அமைப்பாகும். பாராளு மன்ற வேலைகளை போல் மாநில அளவில் சட்டமன்றம் செயல்படும்.

### ஊராட்சி மன்றங்கள்

கிராமப்புற பகுதிகளில் தன்னாட்சி செய்வதற்குண்டான அமைப்பு ஊராட்சி மன்றங்களாகும். ஊராட்சி மன்றங்கள் மாவட்ட, வட்ட மற்றும் கிராம நிலையில் செயல்படும்.

### தேர்தல் ஆணையம்

தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்.

குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்தல் ஆகிய பணிகளை தேர்தல் ஆணையம் செய்யும்.

தேர்தலுக்கு வேண்டிய வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தொகுதி வரையறையை மாற்றியமைத்தல், அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் அங்கீகாரம் அளித்தல், தேர்தல் செலவுகள் வரையறை நிர்ணயித்தல், தேவைப்பட்டால் தேர்தலை ஒத்திப் போடுதல் ஆகிய பணிகளை தேர்தல் ஆணையம் செய்யும்.

### மக்கள் ஆட்சி வெற்றி பெற

மக்கள் ஆட்சி பெற்றி பெற மூன்று தேவைகள் இன்றியமையாதவையாகும். 1. அரசியல் முன்தேவை 2. பொருளாதார முன்தேவை 3. சமுதாய முன்தேவை.

### அரசியல் முன்தேவை

மக்கள் ஆட்சி வெற்றி பெற அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். ஆட்சி மற்றும் ஆளுமையின் அனைத்து நிலைகளி லும் மக்களின் பங்கேற்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

### பொருளாதார முன்தேவை

நாட்டின் வருமானம் கடைகோடியில் உள்ள கிராமப்புற மக்கள் வரை சென்று அடைய வேண்டும். வருவாய் தரக்கூடிய வேலை வாய்ப்புகளை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும். சம வேலைக்கு சம ஊதியம் வழங் கப்பட வேண்டும். சுரண்டப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். அனைவருக்கும் உணவு விநியோகம் உறுதி செய்யப்பட வேண்டும்.

### சமுதாய முன்தேவைகள்

சமுதாயத்தில் அனைத்து பிரிவினரின் ‘சமூக அந்தஸ்து’ சமமாக இருக்க வேண்டும். சட்டத் திற்கு முன் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். அனைத்து பிரிவினருக்கும் கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், முதுமைகால பாது காப்பு கொடுக்கப்பட வேண்டும். சிறுபான்மை யினர் அச்சமின்றி வாழ வேண்டும். ❖

# அவசர சட்டம் என்றால் என்ன?

ஜல்லிக்கட்டுக்கு அவசர சட்டம் போடப்பட்டு விட்டது. 'நீட்' தேர்வு எழுதுவதிலிருந்து தமிழக மாணவர்கள் விலக்கு பெற அவசர சட்டம் போடப்பட்டு விட்டது என்றெல்லாம் சமீபத்தில் ஊடகங்கள் அடிக்கடி குரலெழுப்புகின்றன. அவசர சட்டங்கள் எப்போது, எப்படி, எந்த சூழ்நிலையில் இயற்றப்படுகின்றன? இது குறித்து அரசியலமைப்பு சட்டம் விளக்குவது என்ன? கீழே பார்ப்போம்.

சட்டம் இயற்றும் அதிகாரம் மத்தியில் பாராளுமன்றத்திடமும் மாநிலங்களில் சட்டமன்றங்களிடம் உள்ளது. ஒவ்வொரு சட்டமும் பாராளுமன்றத்தில் அல்லது சட்டமன்றத்தில் நிறைவேறி சட்டமாகிறது.

பாராளுமன்ற சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வருகிறது. (அரசியலமைப்புப் பிரிவு 107, 108, 109) மாநில சட்டம் ஆளுநரின் ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வருகிறது.

அரசியலமைப்புப் பிரிவு 107, 108, 109 மூன்று பட்டியல்கள்.

நம் அரசியலமைப்பில் மத்திய அரசின் அதிகாரங்கள் உள்ள பட்டியல், மாநில அரசின் அதிகாரங்கள் உள்ள பட்டியல், மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்கள் உள்ள பொது பட்டியல் என்ற மூன்று பட்டியல்கள் உள்ளன.

மத்திய அரசின் அதிகாரங்கள் உள்ள பட்டியலில் உள்ளவை குறித்த சட்டங்களை இயற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது.

மாநில அரசின் அதிகாரங்கள் உள்ள பட்டியலில் உள்ளவை குறித்த சட்டங்களை இயற்ற மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது.

பொது பட்டியலில் உள்ளவை குறித்த சட்டங்களை இயற்ற மத்திய அரசுக்கு எவ்வித தடையில்லை.

ஆனால், மாநில அரசு பொது பட்டியலில் உள்ளவை குறித்த சட்டங்களை இயற்றுவதற்கு முன் மத்திய அரசில் சம்பந்தப்பட்ட துறைகளில் அனுமதி பெறப்பட வேண்டும்.

சட்டம் இயற்றப்பட்ட பின் குடியரசு தலைவரின் ஒப்புதல் பெற வேண்டும்.

## அவசர சட்டம்

பாராளுமன்றம் நடக்காதபோது மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டுமானால் மத்திய அமைச்சரவை முடிவு செய்து, அதனை குடியரசு தலைவரின் ஒப்புதல் பெற்றால் அவசர சட்டம் நடைமுறைக்கு வருகிறது.

ஆனால், இவ்வாறு வரும் அவசர சட்டம் ஆறு மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். இல்லா விட்டால் அவசர சட்டம் ரத்தாகிவிடும்.

சட்டமன்றம் நடக்காதபோது மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டுமானால் மாநில அமைச்சரவை முடிவு செய்து அதனை ஆளுநரின் ஒப்புதல் பெற்றால் அவசர சட்டம் நடைமுறைக்கு வருகிறது.

ஆனால், இவ்வாறு வரும் அவசர சட்டம் ஆறு மாதத்திற்குள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் அவசர சட்டம் ரத்தாகிவிடும். (அரசியலமைப்பு பிரிவு 123).

பொது பட்டியல் குறித்த அவசர சட்டம்.

மாநில அரசு பொது பட்டியலில் உள்ளவை குறித்த அவசர சட்டம் இயற்ற மத்திய அரசில் சம்பந்தப்பட்ட துறைகளில் முன் அனுமதி பெற வேண்டும்.

அச்சட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவது நலம்.

பின் மாநில ஆளுநரின் ஒப்புதல் பெற்று அவசர சட்டம் நடைமுறைக்கு வருகிறது. (அரசியலமைப்புப் பிரிவு 213)

அவசர சட்டம் பாராளுமன்றம், சட்டமன்றம் இயற்றும் சட்டத்திற்கு எந்த வகையிலும் குறைவானதல்ல. ❖

போராட்டத்தின் தலைவாசல்

# நெடுவாசல்

ஆதித்யா

ஜல்லிக்கட்டு போராட்டத்தின் தீச் ஜ்வாலைகள் இப்போது நெடுவாசல் கிராமத்தை தகித்துக் கொண்டிருக்கின்றன. தகிப்புக்கு காரணம் பிப்ரவரி 15ஆம் தேதி அங்கே ஹைட்ரோ கார்பன் எரிவாயுவை எடுப்பதற்கு மத்திய அரசு வழங்கிய அனுமதி. இதனால் நிலத்தடி நீர் பாதிப்புக்கு உள்ளாகும். எரிவாயு எடுப்பதால் அதிலிருந்து வெளியேறும் நச்சுப் பொருட்களால் காற்று, நிலம் மாசுபடும் என்றும், அதன் காரணமாக எதிர்காலத்தில் உழவும், தொழிலும் செய்ய முடியாத நிலைக்கு இப்பகுதி மக்கள் தள்ளப்படுவர் என்றும் சமூக ஆர்வலர்களும், விவசாயிகளும் தெரிவிக்கின்றனர்.

மத்திய அரசாங்கம் கொண்டு வருகிற ஒரு பெரிய திட்டம், பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருவது எப்படி சாத்தியமோ, அதே போல பாதிப்புகள், அபாயங்களுக்கான சாத்தியங்களும் அதிலிருக்கும். நலன்கள், பாதிப்புகள் இரண்டை மட்டுமே கூட்டிக் கழித்து கணக்கு போட்டு திட்டங்களை அறிவித்து விடுகிறது அரசு. இந்த நலன்களை யார் பெறுகிறார்கள், பாதிப்புகளை யார் அனுபவிக்கிறார்கள், காலப்போக்கில் எதன் தாக்கம் அதிகம் என்பதும் முக்கியம். ஒரு பெரிய திட்டத்தின் பலன்களை எல்லோரும் அனுபவிக்கலாம். அதன் விளைவுகளை, பாதிப்புகளை, ஆபத்துகளை உள்ளூர் மக்களே அதிகம் சுமக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனம்.

தமிழகத்தின் வறட்சி மாவட்டங்களில் ஒன்று புதுக்கோட்டை. ஆயிரம் அடிக்கு ஆழ்துளை கிணறு அமைத்தும் சில இடங்களில் தண்ணீர் இல்லை. 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளம், ஏரிகள் வறண்டுள்ளன. இந்த மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் அநேக இடங்களில் நூற்றுக் கணக்கான ஆழ்துளை கிணறுகளை அமைத்து தண்ணீரை வெளிக்கொணர்ந்து நெல், சோளம், கடலை, வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இத்தகைய பசுமையான பகுதிகளில் இயற்கை எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம் (ஓஎன்ஜிசி) அடுத்தடுத்து எரிபொருள் சோதனை முயற்சியில் கடந்த சில ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தது. அதன் தொடக்கமாக வடகாடு ஊராட்சி கல்லிக்கொல்லையில் கடந்த 15 ஆண்டு களுக்கு முன்பு மாணிக்கவாசகம் உள்ளிட்ட 4 பேரிடம் இருந்து சுமார் 4 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி அதில், சுமார் 5 ஆயிரம் அடி ஆழத்தில் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது. அதிலிருந்து எரிபொருள் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு, அந்த இடத்தை அப்படியே மூடி வைத்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

இதேபோல, கோட்டைக்காடு, கருக்காகுறிச்சி, வாணக்கன்காடு, நெடுவாசல் (நல்லாண்டார் கொல்லை) ஆகிய இடங்களில் விவசாயிகளிடம் இருந்து நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி, அதில் ஆழ்துளை கிணறுகளை அமைத்து எரிபொருள் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது, அந்த ஆழ்துளை கிணற்றில் இருந்து கருப்பு நிறத்தில் எண்ணெய் எடுத்து உள்ளூரிலும், வெளியூருக்கு கொண்டு சென்றும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அந்த எண்ணெய் அங்குள்ள தொட்டிகளி லும் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த ஆழ்துளை கிணறுகளின் மேல்பகுதியில் சுமார் 30 அடி உயரத்துக்குமேல் தீ பற்றவைத்து எரிய வைத்து எரிவாயுவின் தன்மை குறித்தும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

எந்தப் பணிகளை மேற்கொண்டாலும் அதைப்பற்றி உள்ளூரில் யாருக்கும் தெரியப் படுத்துவதில்லை. மேலும், அந்தப் பகுதிக்குள் யாரையும் அனுமதிப்பதும் இல்லை. தூரத்தில் நின்றுதான் மக்கள் வேடிக்கை பார்த்தனர்.

போபால் விபத்துக்கு 32 வருடங்களுக்கு பின்னரும், விஷவாயு கசிவு தாக்குதலை அனுபவிக்கிறார்கள் போபால் மக்கள். ஊனத்தையும், உடலுறுப்பு சிதைவு நோய்களையும் சுமக்கிறார்கள். யூனியன் கார்பைடு நிறுவனம் விட்டுச் சென்ற நச்சுக் கழிவு இன்னும் அகற்றப்படவில்லை அங்கே.

மக்கள் எதிர்க்கிறார்கள், போராடுகிறார்கள். ஆனால், மத்திய ஆட்சியாளர்கள் கவலைப்படவில்லை. தேசிய கட்சிகள் காலூன்ற முடியாத மாநிலம் இது எனும் சூழலில், இங்குள்ள மத்திய தலைவர்களில் ஒருவர் நாட்டுக்காக நீங்கள் தியாகம் செய்ய வேண்டும் என்கிறார். யார் வாழ யார் தியாகம் செய்வது? புரியவில்லை நமக்கு. இன்னொருவர் "பெரும் திட்டங்களை ஏன் எங்கள் விருப்பமின்றி எங்கள் மீது திணிக்கிறீர்கள்?" என்று பேசுபவர்களை தமிழ் தேசியவாதி என்று முத்திரை குத்தி முடக்கப் பார்க்கிறார். இன்னொருவர் இந்தத் திட்டத்தை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் எதிர்க்கவில்லை. இங்குதான் ஒரு சிலரின் தூண்டுதலால் எதிர்க்கின்றனர் என்கிறார்.

தற்காலத்தில் தமிழகம் புரட்சிகள் புறப்படும் மாநிலமாக மாறி வருகிறது. ஜல்லிக்கட்டு போராட்டம் இங்கு நடந்த பின்தான் கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் அதுபோன்ற போராட்டங்கள் நடந்தன. மத்திய அமைச்சர் அவசரப்படத் தேவையில்லை. ஹைட்ரோ கார்பன் திட்டத்தை எதிர்க்கும் தமிழகத்தின் புரட்சி மற்ற மாநிலங்களிலும் வெடிக்கும் என்பதை போகப்போக தெரிந்து கொள்வார்.

மக்கள், காவிரி நடுவர் மன்றம் அமைக்கும் விஷயத்தில் உச்ச நீதிமன்றத்தில் தமிழகத்திற்கு எதிரான நிலைபாட்டை மத்திய அரசு எடுத்த போதே அதன் உண்மை முகத்தை புரிந்து கொண்டு விட்டார்கள் என்பதன் தொடர்ச்சி ஜல்லிக்கட்டுப் போராட்டம், நீட்சி நெடுவாசல் போராட்டம். அரசியல்வாதிகளை நம்பி பிரயோசனமில்லை என மக்கள் வீதிக்கு வந்து போராட ஆரம்பித்து விட்டார்கள் என்பதை இனிமேலாவது அரசியல் வாதிகள் உணர்ந்து மாநில மக்களின் பக்கம் நிற்பது அவர்களுக்கு நல்லது.

நமது அரசு ஊழியர் சங்கமும் நெடுவாசல் போராட்டத்திற்கு ஆதரவளித்துள்ளது. புதுக்கோட்டை மாவட்ட அரசு ஊழியர்கள் பிப்ரவரி 28ஆம் தேதி மதிய உணவு இடை வேளையில் இதற்காக ஆர்ப்பாட்டம் நடத்தி யுள்ளனர். மற்ற மாவட்டங்களிலும் இது தொடர்கிறது. அனைத்துத் தரப்பினரும் ஆதர வளிக்கும் இந்தப் போராட்டம் வெற்றி பெற அரசு ஊழியர் சங்கம் போராட்ட முனையில் இருப்ப வர்களுக்கு புரட்சிகர வாழ்த்துக் களையும், ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது. ❖

# துளிப்பா அந்தாதி

உடைமை வர்க்க ஆசை
பணம் மேலும் பணம்
பொதுமை பேணும் குணம்!

குணம் குப்பையில்
பணம் பந்தியில்
மனிதம் கேள்வியில்!

கேள்விபதில் மனப்பாடம்
ரோபோக்கள் உருவாக்கம்
மாற்றுக் கல்வியே மனிதராக்கும்!

மனித உறவுகள்
தீர்மானிக்கும் பொருளியல்
மார்க்சியத் தெளிவு!

தெளிவு தத்துவத்தில்
ஒளிவு நடைமுறையில்
விளைவு தோல்வியில்!

தோல்வியில் வெறுப்பு
வெற்றியில் இறுமாப்பு
இயல்பே சிறப்பு!

சிறந்த விஞ்ஞானி
செயற்கைக் கோளுக்குப் பூசை
நம்பிக்கையற்ற அறிவியல்!

அறிவியல் திறவுகோல்
மூடநம்பிக்கையைப் பூட்டும்
பகுத்தறிவைத் திறக்கும்!

திறக்காத கதவுகள்
தகர்த்தன
உழைக்கும் வர்க்கப் போராயுதம்!

போராட்ட உத்தி
அகப்புறச் சூழலைச் சுற்றி
தழுவும் வெற்றி!

**- பெரணமல்லூர் சேகரன்**

# மாநிலம் தழுவிய உண்ணாவிரதம்

எட்டாவது ஊதிய மாற்றக் குழுவை உடனே அமைத்து ஊதிய மாற்றம் செய்திடல், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பயனளிப்பு ஓய்வூதியத்தை வழங்குதல், 1.1.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்குதல், சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல், தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து காலியாக உள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்துதல், சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவித்தல் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டில் எடுத்த முடிவின்படி 2.2.2017 அன்று மாநிலம் தழுவிய உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

## மதுரை

காளவாசலில் மாவட்டத் தலைவர் மு.முருகன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாநிலத் தலைவர் கே.பி.ஓ.சுரேஷ் துவக்கி வைத்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் உரையாற்றினார். இதில் அ.பால்முருகன், எஸ்.நடராஜன், செல்வகுமார், தங்கவேலு, முருகையன், தமிழ், சோலையன், பாலாஜி, நவநீதகிருஷ்ணன், கண்ணதாசன், ராமதாஸ், கே.நீதிராஜா, ஆர்.பாண்டியம்மாள், மணிகண்டன் உள்ளிட்ட பல்வேறு துறைச் சங்கங்களின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பேசினர். மாவட்ட துணைத் தலைவர்கள் இராம மூர்த்தி, ஜெயராஜ ராஜேஸ்வரன், விஜயபாஸகர் உள்ளிட்ட நிர்வாகிகளும் உரையாற்றினர். மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றி னார். மாவட்டப் பொருளாளர் எஸ்.எம். வேலுமணி நன்றி கூறினார். இதில் 175 பெண் ஊழியர்கள் உட்பட422 பேர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் சு.முத்துராஜ் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் சி.ஆர்.ராஜ்குமார் துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் ச.இ.கண்ணன் விளக்கவுரையாற்றி னார். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் வி.எஸ்.வைரமுத்து, பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் இரா.முருகன், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட துணைத் தலைவர் டி.இராஜன், மூட்டாவின் 2ஆம் மண்டல செயலாளர் பி.முத்தரசு, சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.என்.தேவா ஆகியோர் வாழ்த்தி பேசினர். முன்னாள் மாநில பொதுச் செயலாளர் இரா.பாலசுப்பிரமணியன் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் கே.சிவஞானம் நன்றி கூறினார். இதில் 380 பெண் ஊழியர்கள் உட்பட 826 ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கரூர்

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சிஐடியு மாவட்டத் தலைவர் ஜி.ஜீவானந்தம் தொடங்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் கோரிக்கை விளக்கி பேசினார். மாவட்ட நிர்வாகிகள் என்.சந்திரன், ஆர்.மாதேஸ்வரன், ஆர்.தாமோதரன், பி.திருநாவுக்கரசு, கே.கருணாகரன், கே.சிவசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் சி.விஜயகுமார், மாவட்ட தணிக்கையாளர்கள் டி.சரவணன் மற்றும் பி.பாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினார்.

துறைச்சங்க நிர்வாகிகள் ஜெ.செல்வகுமார், எல்.கே.சுப்பிரமணியன், கோ.லட்சுமணன், கே.இளங்கோ, இரா.நாராயணன், கே.குஞ்சிதம், பி.சரவணன், ஆர்.பிரேம்குமார், சீரங்கன், ஆர்.குப்புசாமி, கே.அறிவழகன், எம்.அண்ணா துரை, செல்வம், பி.பழனிசாமி, எல்.பாலசுப்பிர மணியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் சிறப்புரை யாற்றினார். மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராமன் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை

திலகர் திடலில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கே.நாகராஜன் தலைமையேற்றார். நிர்வாகிகள் சி.கோவிந்தசாமி,

கே.குமார், ஏ.பழனிச்சாமி, கே.குமரேசன், ரமா.ராமநாதன், வி.பத்மினி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போராட்டத்தைத் தொடங்கி வைத்து காப்பீட்டுக் கழக ஊழியர் சங்க தஞ்சை கோட்டத் துணைத் தலைவர் எம்.அசோகன் உரை யாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் ஆர்.ரெங்கசாமி பேசினார். போராட்டத்தை ஆதரித்து தோழமைச் சங்க நிர்வாகிகள் பேசினர். போராட்டத்தை நிறைவு செய்து மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் உரையாற்றினார். முடிவில் மாவட்டப் பொருளாளர் எம்.சாமிநாதன் நன்றி கூறினார்.

## திருச்சிராப்பள்ளி

மத்திய பேருந்து நிலையம் அருகில் திருச்சி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான துறைகளில் உள்ள ஊழியர்கள் பங்கேற்புடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த உண்ணாவிரதத்துக்கு மாவட்டத் தலைவர் டி.இளங்கோவன் தலைமை வகித்தார். மாவட்ட இணைச் செயலாளர் ஜெ.எலிசபெத்ராணி வரவேற்புரை ஆற்றினார். மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் உண்ணா விரதத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்ட இணைச் செயலாளர் எம்.பி. விவேகானந்தன் கோரிக்கை விளக்க உரை யாற்றினார். உண்ணாவிரத போராட்டத்தினை வாழ்த்தி பல்வேறு துறைவாரி சங்க மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பி.புருஷோத்தமன் நிறைவுரையாற்றினார். நிறைவாக மாவட்ட பொருளாளர் எம்.பழனியப்பன் நன்றி கூறினார்.

## காஞ்சிபுரம்

காவலான் கேட்டில் நடைபெற்ற போராட் டத்திற்கு மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையேற்றார். மாவட்ட துணைத் தலைவர் எம்.பி.திலகம் வரவேற்றார். மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் விளக்கவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் கே.பக்கிரி, பி.சார்லஸ் சசிகுமார், ஏ.சுகுமாரன், எம்.தாமோதரன், ஆர்.கோவிந்தன், எம்.என்.ஸ்ரீராம், வி.தென்னசு, பி.இராமமூர்த்தி, என்.சாரங்கன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். முன்னாள் மாநில பொருளாளர் வி.கணபதி நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் வி.ராஜ்குமார் நன்றி கூறினார்.

## திண்டுக்கல்

மாவட்டத் தலைவர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் மாவட்டச் செய லாளர் முபாரக் அலி விளக்கவுரை யாற்றினார். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி துவக்கவுரையாற்றினார். இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத் தலைவர் வாஞ்சி நாதன் நிறைவுரை யாற்றினார். தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். ராஜேந்திரன் நன்றி கூறினார். இதில் 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## தருமபுரி

தருமபுரியில் மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். சிஐடியு மாவட்டச் செயலாளர் சி.நாகராஜன் துவக்கி வைத்து பேசினார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

## நாகப்பட்டினம்

நாகை அரசு ஊழியர் சங்கக் கட்டிடம் முன்பு மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் வரவேற்றார். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் துவக்கவுரை யாற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ. அன்பழகன் விளக்கிப் பேசினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் வி.பாலசுப்பிர மணியன், சு.சிவ குமார், எஸ்.தியாகராஜன், து.விஜயராகவன், என்.புகழேந்தி, இராமநாத கணேசன், ட்டீ.பால்ராஜ், ப.விஜயகுமார், ப.ஜீவானந்தம், சி.வாசு, ஆர்.காயாம்பு, எல்.பிரேம்சந்திரன், அ.சௌந்தரபாண்டியன், எம்.காந்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். சிஐடியு மாவட்டச் செயலாளர் சீனி.மணி நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார். 60 பெண்கள் உட்பட 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## ஈரோடு

மாவட்டத் தலைவர் பாஸ்கர்பாபு தலைமை யில் 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்ற உண்ணாவிரதம் நடைபெற்றது. துறைவாரி சங்கங்களின் நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் நிறைவுரையாற்றினார். ❖

# மாதரை போற்றுவோம்!

எஸ்.டி.எஸ்

இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினம் உருவானதே ஒரு போராட்ட களத்தில் தான். 1900ஆம் ஆண்டின் முதல் 10 ஆண்டுகளில் பெண்கள் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். இவற்றிற்கு எதிராக உலகம் முழுவதும் பெண்கள் வெகுண்டெழுந்து போராடிக் கொண்டிருந்தார்கள். சில நாடுகளில் பெண்களுக்கான அமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டன.

## சர்வதேச மகளிர் தினம் தோற்றம்

1907-ல் ஜெர்மனியன் ஸ்டட்கார்ட் என்ற நகரில் முதன்முதலாக "சோசலிச பெண்கள் மாநாடு" நடைபெற்றது. இந்த மாநாட்டில் 15 நாடுகளில் இருந்து 59 பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். உலகம் முழுவதுமுள்ள பெண்கள் அமைப்புகளை ஒருங்கிணைத்து ஒரு சர்வதேச பெண்கள் அமைப்பு இம்மாநாட்டில் ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்கியது. இந்த அமைப்பிற்கு கிளாரா ஜெட்கின் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

1908ஆம் ஆண்டு ஆடை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த மகளிர் தங்களுக்கு நியாயமான ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சி தேசிய அளவிலான முதல் மகளிர் மாநாட்டை பிப்ரவரி 28 அன்று நடத்தியது. அன்றைய தினத்திலிருந்து 1913 வரை பிப்ரவரி கடைசி ஞாயிற்றுக்கிழமை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்பட்டது.

ஜெர்மனியில் 1910-ல் கோபன்ஹேகன் நகரில் ஜெர்மனியின் சோசலிச ஜனநாயக கட்சி இரண்டாவது மகளிர் மாநாட்டை நடத்தியது. இதில் 17 நாடுகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பல்வேறு நாடுகளின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளாகவும், சோசலிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளாகவும், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர். பின்லாந்து நாட்டின் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதிநிதிகளாகவும் வந்திருந்தனர். இந்த மாநாட்டில் சோசலிஸ்ட் ஜனநாயக கட்சியின் மகளிர் பிரிவு தலைவராக இருந்த கிளாரா ஜெட்கின், பெண்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒவ்வொரு ஆண்டும் "சர்வதேச மகளிர் தினத்தை" நடத்திட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். இந்தத் தீர்மானம் அனைத்து பிரதிநிதிகளாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

## ரொட்டியும், ரோசாப்பூவும்

தொடர்ந்து 1911-ல் சர்வதேச மகளிர் தினம் முதன்முதலாக ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் மார்ச் மாதம் 19ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இந்த நாடுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட பேரணிகள் நடைபெற்றன. இந்தப் பேரணிகளில் பெண்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை, தேர்தல்களில் வாக்களிப்பதற்கான உரிமை, பயிற்சி பெறுவது, பொது அலுவலகங்களில் வேலைசெய்வது, சமூகத்தில் பாகுபாடின்றி நடத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

அதே ஆண்டில் மார்ச் மாதம் 26ஆம் தேதி நியூயார்க் நகரில் நடைபெற்ற ஒரு முக்கோண தீ விபத்தில் பணியில் ஈடுபட்டிருந்த 140 பெண்கள் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இத்தாலி நாட்டை சேர்ந்தவர்கள். இந்த விபத்து அன்றைய தினம் அமெரிக்க நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலை இருந்ததை வெளிப்படுத்தியது. இதன் பின்னர், தொழிலாளர் சட்டங்களை கடுமையாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட இந்த நிகழ்ச்சி அடிகோலாக அமைந்தது.

அதே ஆண்டில் பெண்கள் நடத்திய "ரொட்டியும் ரோசாப்பூவும்" என்ற இயக்கம் பெண்களின் கோரிக்கைகளை வலியுறுத்துவதாக அமைந்தது. இத்தகைய தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமே பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையும், வேலை செய்யும் உரிமையும், சம ஊதியம் பெறும் உரிமையும் பிற்காலத்தில் கிடைத்தன.

## மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம்

ரஷ்ய நாட்டில் 1913ஆம் ஆண்டு பிப்ரவரி கடைசி ஞாயிறு அன்று நடைபெற்ற மாநாட்டில்

மார்ச் 8-ஐ பெண்கள் தினமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது. 1914-ல் போருக்கு எதிராக பெண்கள் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பேரணி நடத்தினர். 1917-ல் ரஷ்ய பெண்கள் "ரொட்டிக்காவும் போருக்கு எதிராக வும்" பிப்ரவரி கடைசி ஞாயிறு அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது நடைபெற்ற போரில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உயிரிழந்தனர். இந்த வேலை நிறுத்தத்தை தடை செய்ய ஆரம்பத்தில் அரசு முயற்சி செய்த போதும் பின்னர் ரஷ்ய நாட்டு பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை முதன்முறையாக தந்தது குறிப்பிடத்தக்கது. அந்த வீரம் செறிந்த வேலை நிறுத்தம் ரஷ்ய ஜூலியன் காலண்டர்படி பிப்ரவரி 23 என்றாலும், உலகம் முழுவதும் கடைபிடித்து வரும் காலண்டர்படி மார்ச் 8 ஆகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளே நாம் இன்று கொண்டாடும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாகும்.

இன்று சர்வதேச மகளிர் தினம் உலகில் அனைத்து நாடுகளிலும் உற்சாகமாக கொண்டாடப் படுகிறது. சீனா, வியட்நாம், ஒன்றுபட்ட ரஷ்ய நாடுகளில் இன்று மகளிர் தினத்திற்கு அரசு விடுமுறை விடப்படுகிறது. அமெரிக்காவில் மார்ச் மாதம் முழுவதும் பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

## இந்திய நாட்டில் பெண்கள் நிலை

நமது நாட்டிலும் மகளிர் தின கொண்டாட் டங்கள் நடைபெற்று வருகின்றன. வணிக நிறுவனங்கள் இந்த நாளை பயன்படுத்தி ஆடை அணிகலன்கள் விற்பனைக்க, விளம்பரத்திற்கு பயன்படுத்திக் கொள்கின்றன. ஆனால், இந்திய நாட்டில் பெண்கள் நிலை மிகவும் மோசமாக உள்ளது.

இந்திய நாட்டில் பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளதாக "அசோசெம்" அமைப்பு சேகரித்த புள்ளி விவரங்கள் கூறு கின்றன. இரவு நேரங்களில் தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றும் பெண்களும், விமான போக்குவரத்துப் பணியில் பணியாற்றும் பெண்களும், மருத்துவமனையில் பணியாற்றும் பெண்களும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்றும் நிறுவனங்கள் இவர்களுக்கு போதுமான பாதுகாப்பை தரத் தவறியுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த பாதுகாப்பற்ற சூழ்நிலை தலைநகர் டெல்லியில் அதிகபட்சமாக 65 சதவீதமும், ஹைதராபாத்தில் 28 சதவீதமும், மும்பையில் 28 சதவீதமும் உள்ளது.

பெங்களூரில் உள்ள 2200 தொழில் நிறுவனங்களில் 1600 நிறுவனங்கள் மட்டும் தொழில் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் 75000 முதல் 95000 பெண்கள் பணியாற்றி வருகின்றனர். மருத்துவமனைகள், விமான போக்குவரத்து, தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றும் இவர்களில் 56 சதவீத பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என "அசோசெம்" புள்ளி விவரம் கூறுகிறது.

மகாத்மா காந்தி, பண்டிட் ஜவகர்லால் நேரு, தந்தை பெரியார், பாரதியார் போன்றவர்கள் பெண்களுக்கு சம உரிமை வழங்குவது குறித்து பேசியிருந்தாலும், பெண்களுக்கென தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் அவை யெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாகவே இன்றளவும் உள்ளன. நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்தி லும் பெண்களுக்கான 33 சத இட ஒதுக்கீடு பிரச்சனையில் இன்று இந்திய அரசியல்வாதிகளின் முகமுடிகள் கிழித்தெறியப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. இடதுசாரி கட்சித் தலைவர் களை தவிர ஏனையோர் இரட்டை நிலைபாடு கொண்டிருப்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட இட ஒதுக்கீடு மசோதா, மக்களவையில் நிறைவேற்ற முடியாமல் உள்ளது வெட்கக்கேடானது.

இன்று பெண்கள் தினத்தை கொண்டாடுவதில் ஒவ்வொருவருக்கும்த ஒரு நோக்கம் உள்ளது. அதேபோல் உழைப்பாளி மக்களுக்கும் ஒரு நோக்கம் உள்ளது.

வேலைசெய்யுமிடங்களில் ஆண்-பெண் என்ற பாகுபாடு இல்லாமலிருக்கவும், வேலை செய்யு மிடங்களில் பாதுகாப்பினை உத்திரவாதப்படுத்த வும், குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்திடவும், பாலியல் பலாத்காரத்தை தடுத்து நிறுத்திடவும், வரதட்சிணை கொடுமைகளை களைந்திடவும், பெண்களை வணிக விளம்பரத்திற்கு அருவருக்கத் தக்க முறையில் பயன்படுத்துவதை தடுத்து நிறுத்திடவும், சாதிய கொடுமைகளில் இருந்து பெண்களை மீட்டெடுத்திடவும், உலகமயத்தி னால் முதலில் பாதிக்கப்படுவது பெண்கள் என்ப தால் அவர்களை அதற்கு எதிரான போராட் டங்களில் ஈடுபடுத்துவதும், இன்று உழைப்பாளி மக்கள் முன் உள்ள தலையாய கடமையாகும். இந்த உணர்வோடு இந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுவோம். ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

***தமிழ்நாடு வனத்துறை அலுவலகப் பணியாளர் சங்கத்தின்*** திண்டுக்கல் மாவட்ட மையத்தின் சார்பில் முன்னாள் மாநிலச் செயலாளர் மறைந்த கு.முத்துக்கிருஷ்ணசாமி என்ற இராஜேஷ் என்பவரின் இரண்டாமாண்டு நினைவாக 26.01.2017 அன்று தமிழ்நாடு வனத்துறை அலுவலகப் பணியாளர் சங்கக் கொடியினை, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைந்துள்ள வேலு நாச்சியார் வளாகத்தில் வனத்துறை அலுவலகம் முன்பாக கொடிக்கம்பம் அமைத்து கொடியேற்றி வைக்கப்பட்டது. கொடிக்கம்ப கல்வெட்டினை மாநில பொதுச் செயலாளர் சு.கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார். சங்கப் பதாகையினை மாநிலத் தலைவர் மு.பார்த்திபன் ஏற்றி வைத்தார். மாநிலப் பொருளாளர் அ.ரா.து.கண்ணன் மற்றும் திண்டுக்கல் மாவட்ட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள், தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். திண்டுக்கல் மாவட்டத் தலைவர் சாமுவேல் மனோகரன், மாவட்டச் செயலாளர் மு.திருவாசகம், கமருதீன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புற செய்தனர். மு.செல்லப்பாண்டி நன்றி கூறினார்.

***தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின்*** திருவாரூர் மாவட்ட தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் 20.02.2017 அன்று காலை 10.00 மணிக்கு ஒருநாள் தற்செயல் விடுப்பு எடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து பெருந்திரள் முறையீடு அரசின் உயர் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முன்னதாக திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட தலைவர் சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார். சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் பொன்னியின் செல்வன் வரவேற்புரை ஆற்றினார். மாநில துணைத் தலைவர் எஸ்.புஷ்பநாதன் விளக்கவுரை ஆற்றினார். இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் எம்.சௌந்திரராஜன், மாவட்ட தலைவர் ஜி.பைரவநாதன், மாவட்ட செயலாளர் வெ.சோமசுந்தரம், ஊராட்சி செயலாளர், ஒன்றிய பணி மேற்பார்வையாளர் உள்ளிட்ட சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட பொருளாளர் செந்தில் நன்றி கூறினார். இதில் 75 பெண் ஊழியர்கள் உட்பட 225 பேர் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் மாநிலச் செயலாளர் ஆர்.ஆறுமுகம், பட்டு வளர்ச்சி துறை அலுலலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் எஸ்.வெங்கடேசன், வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாநில துணை தலைவர் எம்.யோகராசு, சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சி.எம்.நெடுஞ்செழியன், தொலை தொடர்பு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் பி.கிருஷ்ணன், இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் கோட்ட இணை செயலாளர் ஏ.மாதேஸ்வரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி நிறைவுறையாற்றினார். பொருளாளர் கே.புகழேந்தி நன்றி கூறினார்.

***ஊரக வளர்ச்சித் துறை***யின் அச்சாணியாக விளங்கும் ஊராட்சி செயலர்களுக்கு அரசு அறிவித்தப்படி காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், காலி பணியிடங்களை நிரப்ப

## பணி ஓய்வு

கடலூர் மாவட்ட உணவு பாதுகாப்பு (ம) மருந்து நிர்வாகத் துறை அலுவலர்கள் சார்பாக நெல்லிக்குப்பம் நகராட்சி மற்றும் அண்ணா கிராமம் வட்டாரம் உணவு பாதுகாப்பு அலுவலர் இரா.கந்தசாமி அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா 31.1.2017 அன்று நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க கடலூர் மாவட்ட பொருளாளரும், வட்டார உணவு பாதுகாப்பு அலுவலருமான இரவிச்சந்திரன் தலைமையேற்றார். முன்னதாக ப.நல்லதம்பி வரவேற்றார். ஓய்வூதியர் சங்க மாநிலச் செயலாளர் டி.புருஷோத்தமன், அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்டச் செயலாளர் காசிநாதன், இந்நாள் மாவட்டச் செயலாளர் இல.அரி கிருஷ்ணன் மற்றும் பலர் வாழ்த்தி பேசினர். சீ.செந்தாமரைக்கண்ணன் நன்றி கூறினார்.

வேண்டும், உள்ளாட்சி தேர்தலை உடனே நடத்த வேண்டும் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மார்ச்-14 அன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடைபெறுவதை விளக்கும் வகையில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் பிப்-27 அன்று மாநிலம் தழுவிய வேன் பிரச்சாரம் கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து துவங்கியது.

சங்கத்தின் மாவட்ட தலைவர் டி.மோகன் தலைமை தாங்கினார். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி மாவட்ட செயலாளர் எஸ்.காந்திமதிநாதன், பொருளாளர் மீராகண்ணன், நிர்வாகிகள் மெல்கிராஜாசிங், மகேந்திரன், ஸ்ரீகாந்த், அமிழ்தமன்னன், ஜெகநாதன், மணிசேகர், முனுசாமி, கணேசன், சந்திரசேகர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

கும்மிடிபூண்டியை தொடர்ந்து சோழவரம், எல்லாபுரம், ஈக்காடு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகம், கடம்பத்தூர், திருவலாங்காடு ஆகிய இடங்களில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் வேன் பிரச்சாரம் மேற்கொள் ளப்பட்டது. இதனை தொடர்ந்து வேலூர் மாவட்டம் அரக்கோணம் பகுதிக்கு பிரச்சாரம் தொடர்ந்தது. ஆங்காங்கே ஊழியர்கள் சிறப்பான வரவேற்பை அளித்தனர். ❖

### வாழ்த்துக்கள்

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை 2017 பிப்ரவரி 10, 11 ஆகிய தேதிகளில் ஈரோட்டில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாநிலத் தலைவராக கி.ஆண்டாள், துணைத் தலைவர்களாக எ.பெரியசாமி, ஜே.எஸ்.விஜயகுமார், கு.சத்தி, கே.அண்ணாதுரை, பி.பாண்டி, தமிழரசன், பொதுச் செயலாளராக எஸ்.முருகேசன், மாநிலச் செயலாளர்களாக பே.பேயத்தேவன், ஆர்.அய்யம்மாள், ஆர்.நூர்ஜஹான், ஜி.சாவித்திரி, எஸ்.ரங்கசாமி, எம்.கண்ணன், பொருளாளராக பா.சுந்தரம்மாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இம்மாநாட்டில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் இரா.முத்துசுந்தரம் நிறைவுரையாற்றினார்.



# கௌரவ செருப்படி

2017 பிப்ரவரி இதழ் படித்தேன். அட்டைப் படங்கள் அமர்க்களமாக உள்ளது. திணிக்கப் பட்டவைகளை தீர்த்துக் காட்டுவோம் வா! ஜிஜியின் கவிதை அருமை. பலமுறை படிக்கத் தூண்டியது. "கற்றுக் கொள்வோம் கற்றதை மற்றவர்களுக்கும் சொல்வோம்" என போதித்த ஏ.ட்டீ.அன்பழகன் அவர்களுக்கும், நன்றி.

- **மு.தமிழ்வாணன்**, நாகப்பட்டினம்

"இனி போராட்டம் ஒன்றே அரசுக்கு புரிய வைக்கிற மொழி" தலையங்கமும், "அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்" பொதுச் செயலாளர் மேசையிலிருந்தும், "செல்லாக் காசும் சொல்லாத் துயரும்" கட்டுரையும், ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் நடவடிக்கைகளும் படித்தேன். சிறப்பாக இருந்தது.

- **நா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

இந்த நோய்க்கு மருந்து எங்கிருக்கிறது? ஆட்சியாளர்களின் கார்ப்பரேட் மோகத்தில் தேசத்தின் வளம் தாரை வார்க்கப்படுவதை எடுத்துரைத்தது.

- **சீனி.மணி**, பூந்தோட்டம்

மருந்து தயாரிப்புத் துறை அரசு வசம்தான் இருக்க வேண்டும். அரசு நிறுவனத்தை நஷ்டப்படுத்தியது யார்? என்று களையெடுத்து அந்த நிறுவனத்தை தூக்கி நிறுத்த வேண்டிய பொறுப்பு மத்திய/மாநில அரசுகளுக்கு உள்ளதே தவிர, எல்லாத் துறையையும் விற்பனை செய்யவா ஆட்சியதிகாரத்திற்கு வந்தார்கள்?

- **திருப்பதி**, திருவில்லிபுத்தூர்

சூடா ஒருகோப்பை சூப் கவிதை போராட் டத்துக்கு வராமல் உட்கார்ந்த இடத்திலிருந்தே உரிமை கேட்கும் ஊழியர்களுக்கு கௌரவ செருப்படி கொடுத்தது.

- **நாகநாதன்,** தேவகோட்டை

போராட்ட களத்தின் படங்கள் அனைத்தும் எழுச்சியாக உள்ளது. போராட்ட களத்தில் பெண் தோழர்கள் அதிகம் இருந்தது மகிழ்ச்சி.

- **சி.பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்

# போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையம் துவக்க விழா

**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெறும் பல்வேறு சமூகப் பணிகளில் ஒன்றான ஏழை, எளிய மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள், தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. இந்நோக்கில் கடலூர் மாவட்டத்திலும் 24.2.2017 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட அலுவலகமான மக்கள் சேவை மையம் - எம்.ஆர்.அப்பன் இல்லத்தில் மாவட்ட துணைத் தலைவர் க.சதீஷ்குமார் தலைமையில் பயிற்சி வகுப்பு துவக்க விழா நடைபெற்றது.

மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் வரவேற்றார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் த.பொ.ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு பயிற்சியை துவக்கி வைத்து சிறப்புரை யாற்றினார். மாநிலத் தலைவர் எம்.சுப்பிர மணியன் சிறப்புரையாற்றினார்.

கடலூர் நகர குடியிருப்போர் சங்க பொதுச் செயலாளர் எம்.மருதவாணன், ஓய்வூதியர் சங்க மாநிலச் செயலாளர் டி.புருஷோத்தமன், மாவட்டச் செயலாளர் ஆர்.மனோகரன், முன்னாள் மாவட்டச் செயலாளர் நா.காசி நாதன், வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் துறைவாரி, தோழமை சங்க நிரவ்ாகிகள் கலந்து கொண்டு உரையாற்றினர். மாவட்ட நிர்வாகிகள் பா.மகேஷ், ம.குமார், த.நாட்டுதுரை, இரா.சுரேஷ், வே.கிருஷ்ணமூர்த்தி, ப.துளசி, சி.வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் தா.இரவிச்சந்திரன் நன்றி கூறினார்.




இப்பயிற்சியில் 67 ஆண்கள், 35 பெண்கள் உட்பட 102 பேர் பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்பம் அளித்து பங்கேற்றனர். இந்த பயிற்சி மையம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற ஜெயபாஸ்கரன் (ராயல் பேப்பர் ஸ்டோர்ஸ்), தேவநாதன் (புவனா காப்பியர்ஸ்), எல்ஐசி சார்பாக கடலூர் கிளை உதவி மேலாளர் ஆகியோர் பல்வேறு உபகரணங்கள் வழங்கி உதவியுள்ளனர். பயிற்சியளிக்க பல்வேறு தன்னார்வ ஆசிரியர்கள் முன்வந்து இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். எல்.ஐ.சி. வேலூர் கோட்ட கே.பி.சுகுமாரன் ஒருங்கிணைந்து செயல்பட்டார். ❖

## புதிய நிர்வாகிகள் தேர்வு

### திருச்சிராப்பள்ளி

26.2.2017 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளராக எம்.கென்னடி தேர்வு செய்யப்பட்டார். மேலும் இச்செயற்குழுவில் மாவட்ட துணைத் தலைவர்களாக கே.எம்.ராஜேந்திரன், எம்.சகாதேவன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### வடசென்னை

குறளகம் பகுதி நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக சு.பத்மா, துணைத் தலைவர்களாக த.வேல்முருகன், எ.டேனியல் சத்தியராஜ், க.செல்வராணி, செயலாளராக த.ஏழுமலை, இணைச் செயலாளர்களாக ச.சுந்தரமூர்த்தி, ஞா.மோகன், ராஜா, பொருளாளராக ஆ.கோபிநாதன், செயற்குழு உறுப்பினர்களாக நரேஷ், பாலாஜி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# திருப்புமுனை மாநாட்டின் சிறப்பு அம்சங்கள்

சீர்மிகு முறையில் சிறப்பான வகையில் திருவண்ணாமலையில் 2017 ஜனவரி 6 முதல் 8 வரை நடைபெற்ற 12வது மாநில மாநாடு அரசு ஊழியர்களாகிய நாம் அனைவரும் அடுத்து பயணிக்க வேண்டிய இலக்கிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த மாநாடு எல்லோரும் மெச்சும் வகையில் சீரும் சிறப்புமாக நடைபெற்று முடிந்திருந்த போதிலும் இதன் நினைவலைகள் அடுத்த மாநில மாநாடு வரைக்கும் நம் நெஞ்சில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கும்.

நன்றாக நினைவிருக்கிறது. 3.4.2016 அன்று சென்னையில் நடைபெற்ற நமது மாநில செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்ட விஷயம்தான் திருவண்ணாமலையில் 12வது மாநில மாநாட்டை நடத்துவது என்று. இதற்கான தேதியை முடிவு செய்வதில் கொஞ்சம் காலதாமதமானது. ஏனெனில் 2016ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உள்ளாட்சித் தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்ற சூழ்நிலை இருந்ததால் 3.7.2016 அன்று மதுரையில் கூடிய மாநில செயற்குழுவில் 2017 ஜனவரி 6,7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் நடத்துவது உசிதமானதாக இருக்கும் என்று முடிவெடுக்கப்பட்டது.

மாநாட்டு வரவேற்புக் குழு, மாநில நிர்வாகிகள் முன்னிலையில் 6.8.2016 அன்று திருவண்ணா மலை லோட்டஸ் மினி ஹாலில் அமைக்கப் பட்டது. இதில் சேலம், விழுப்புரம், கிருஷ்ணகிரி, கடலூர், தூத்துக்குடி, கன்னியா குமரி, நாகப் பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அந்தக் கூட்டத்திலேயே துறைவாரி சங்கங்கள் சார்பாக ரூ.4.50 லட்சம் மாநாட்டு நிதியாக வழங்கப்பட்டது. வரவேற்புக் குழு தலைவராக ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.அருண்பாட்சா ஒருமனதாக நியமிக்கப்பட்டார். அதன்பிறகு வரவேற்புக் குழுவின் சார்பாக மாநாட்டு பணிகளை திட்டமிடவும், நிதியளிப்பு வழங்கவும் 5.1.2016, 21.10.2016, 5.11.2016, 19.11.2016, 17.12.2016, 24.12.2016 ஆகிய நாட்களில் கூட்டங்கள் கூட்டப்பட்டன.

மாநில பிரதிநிதித்துவப் பேரவை திருவண்ணாமலையில் உள்ள மாதவி பன்னீர்செல்வம் மகாலில் நடந்தது. பிரதிநிதிகள் தங்குவதற்கு மண்டபத்தோடு இணைந்த மினி ஹால், மல்லிகா மஹால், ஆண்டாள் சிங்கார வேலர் திருமண மண்டபம் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப் பட்டது. 2017 ஜனவரி 8ஆம் தேதி மாநில செயற்குழு நடத்த மம்மி-டாடி மஹால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல் மாநில நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தங்க, பொதுப்பணித்துறை அரசு பயணியர் மாளிகை, தமிழ்நாடு ஓட்டல், ராமகிருஷ்ணா தங்கும் விடுதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பிரதிநிதிகள் மாநாட்டிற்கு வெளியே தோழர் பெரணமல்லூர் சேகரன் எழுதிய புதுக்குறள் பேனர்களும், அரங்கத்திற்கு உள்ளே பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், ஜீவா, மாக்சிம் கார்க்கி, கந்தர்வன், சமயவேல் போன்ற பிரபலங்களின் மேற்கோள்கள் பேனர் வடிவில் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்தது. பிரதிநிதிகள் மாநாட்டு மேடையை ஓவியர் வெண்புறா அவர்கள் வரைந்த கருத்தோவியம் கம்பீர மெருகூட்டியது. மாநாட்டு அரங்கின் நுழைவு வாயிலின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த வெண்புறா அவர்களின் கைவண்ணத்தில் அமைந்த தியாகிகள் ஸ்தூபி காண்போரின் கவனத்தை ஈர்த்தது.



மாநாட்டுக்கான விளம்பரங்களும் திருவண்ணாமலை நகரிலும், மாநாடு நடக்கும் மண்டபத்தை சுற்றிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. திருவண்ணாமலை நகரில் மட்டும் 11 இடங்களில் சுவரெழுத்து விளம்பரம் வரையப்பட்டிருந்தது. உள்ளூர் தொலைக்காட்சியில் மாநாடு நடைபெற்ற நாட்களில் வரிச் செய்திகள் ஓட்டப்பப்பட்டது. நகர் முழுவதும் இயற்கை அழகு மற்றும் எளிய மக்களின் வாழ்வை சித்தரித்து 100க்கும் மேற்பட்ட விளம்பர பேனர்கள் வைக்கப்பட்டிருந்தது. வருவாய்த் துறை, நிலஅளவை ஒன்றிப்பு, உதவி வேளாண்மை அலுவலர் சங்கம், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆகிய சங்கங்களின் சார்பாக வாழ்த்து பேனர்கள் வைக்கப்பட்டிருந்தது. 11 துறைவாரி சங்கங்களின் சார்பாக வாழ்த்து போஸ்டர்கள் நகர் முழுவதும், சுற்று வட்டாரத்தில் உள்ள அலுவலகங்கள் அனைத்திலும் ஒட்டப்பட்டிருந்தன. மாநாட்டு அரங்கத்தின் மேல் முகப்பிலும் மற்றும் சுற்றுச் சுவர்களிலும் அரசு ஊழியர் சங்கத்தின் கொடிகளும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

மாநாட்டு அரங்கம் தோழர் பி.இராமு நினைவாக "தோழர் பி.இராமு நினைவரங்கம்" என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது. மாநாட்டு நிகழ்வுகள் விதவிதமான நிகழ்ச்சிகளுடன் செவிக்கு உணவு படைக்கும் வகையில் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, சமையல் கவிஞர் மெரினா ஆறுமுகம், கடைகன்னி-கருப்பட்டி இனிப்பு பொங்கலில் ஆரம்பித்து வகை வகையான உணவுகளை தயாரித்துக் கொடுத்து மறுபுறத்தில் மூக்கிற்கும் நாக்கிற்கும் நறுமண சுவை விருந்து வைத்துக் கொண்டிருந்தார். செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. வயிற்றுக்கு உணவில்லாதபோது சிறிது செவிக்கு ஈயலாமோ என்கிற சபலத்தை சில பிரதிநிதிகளுக்கு ஏற்படும் வண்ணம் மெரினாவின் சுவைகாற்று எல்லோருடைய சுவாசத்திலும் வாசம் செய்தது.

6.1.2017ஆம் தேதி காலையில் மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியாக மண்டபத்திலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் இருக்கும் அரசு பேருந்து பணிமனை அமைந்துள்ள தேனி மலையிலிருந்து பாப்பம்பாடி ஜமாவின் இசை முழக்கத்துடன் கையில் அரசு ஊழியர் சங்கக் கொடியை ஏந்திய பெண் தொண்டர்கள் அணிவகுக்க நடைபெற்ற எழுச்சிமிகு பேரணியில் மாநில நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், மகளிர் துணைக் குழு பிரதிநிதிகள் போன்றோர் அணிவகுத்த பேரணி அதிர்வேட்டுகளுடன் மண்டபம் நோக்கி சென்றது. அரசு ஊழியர் சங்கக் கொடியை மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை அதன் தலைவர் இரா.முத்துசுந்தரம் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

மாநாட்டு அரங்கத்திற்கு வெளியே நான்கு மருத்துவர்களின் தலைமையில் 15 செவிலியர்களுடன் மருத்துவக் குழு 3 நாட்களும் முழு அளவில் செயல்பட்டது. அரங்கின் வெளியே பாரதி புத்தகாலயம், வம்சி பதிப்பகத்தின் புத்தகங்கள் விற்பனைக்கு அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. பேரணி மற்றும் பொதுமாநாட்டில் கலந்து கொண்ட ஊழியர்களுக்கு 1500 TNGEA கொடிகளும், 500 AISGEF கொடிகளும் 1000 கோரிக்கை அட்டைகளும் அனைத்து மாவட்ட ஊழியர்களுக்கும் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

திருக்கோவிலூர் சாலையில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து பேரணி துவங்கி சுமார் 2 கி.மீ. கடந்து பொது மாநாடு நடைபெற்ற இடமான காந்தி நகர் அடைந்தது. பொது மாநாடு நடைபெற்ற இடமான தோழர் பி.இராமு நினைவுத் திடல் சுமார் 5 ஏக்கர் பரப்பில் மைதானம் முழுவதும் புல்டோசர் இயந்திரம் மூலம் சமன் செய்யப்பட்டிருந்தது. பொது மாநாட்டு அரங்கத்திற்கு 3 நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. 2500 நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. 150 போகஸ் விளக்குகள் ஒளி வெள்ளம் பாய்ச்சின. பொது மாநாட்டு மேடையில் தோழர் மிசா மற்றும் தோழர் இராமு ஆகியோரின் படங்கள் பளிச்சிட்டன. மாநாட்டு நிகழ்வுகள் அனைத்தும் ஊழியர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளித்தது என்றால் அது மிகையல்ல. மாநாட்டு நிகழ்வுகளை முன்கூட்டியே திட்டமிட்டு எவ்வித தொய்வுமின்றி செவ்வனே செய்து முடித்த திருவண்ணாமலை அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையிலான பாராட்டுக்களையும், நன்றிகளையும் அரசு ஊழியர் சங்கம் உரித்தாக்குகிறது.

❖